விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்,
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு சர்வஜித்து ஆடு புரட்டாசி மீ 24உ வெள்ளிக்கிழமை -- Colombo, October, 10. 1947 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 24 | இதழ் 129

வியட்நாம் குடியரசை வீழ்த்த பிரான்ஸின் இறுதி யுத்தம்

தலைவர் ஹோசிமின் தலைநகரை வளைக்கத் திட்டம்

சங்கடப்படும் பிரான்ஸின் ஆக்கிரமிப்பை முறியடிப்போம் என்கிறது வியட்நாம் ரேடியோ

சைகோனிலிருந்து ஹானேய் நகருக்கு பிரெஞ்சுத் தளபதி பாய்ச்சல்

நிருபர் வாசுதேவராவ் தெரிவிக்கும் விவரம்

சைகோன், அக். 8

ராய்ட்டர் நிருபர் வாசுதேவராவ் பின்வருமாறு தெரிவிக்கிறார்:-

இந்தோ-சைனாவின் வடபகுதியான டொங்கின் மாகாணத்தைக் கைப்பற்ற பிரஞ்சுத் துருப்புகள் யுத்தம் ஆரம்பித்து விட்டதாக அம்மாகாணத் தலைநகரான ஹானேயிலிருந்து இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. இந்தோ-சைனா வி[illegible] பாட்டர் இன்று காலை இங்கிருந்து ஹானேய் நகருக்குப் புறப்பட்டுச் சென்றார். இந்தோ-சைனாவிலுள்ள உள்நாட்டு விமானப் போக்கு வரத்துகள் யாவும் நிறுத்தப்பட்டு விட்டன. சைகோனுக்கும் ஹானேய்க்குமிடையே தந்தி தபால் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டுவிட்டது. உத்தரவு கிடைத்ததும் புறப்படத் தயாராக இருக்கும்படி எல்லா பிரஞ்சு விமானபடை பாரசூட் விமானிகளுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஹானேய் நகரிலிருந்து 100 மைல் தூரத்திலுள்ள பேக்கான் என்ற நகரிலுள்ள வியட்நாம் குடியரசுத் தலைவர் டாக்டர் ஹோ சி மின்னின் தலைமைக் காரியாலயத்தை சுற்றி வளைந்து முற்றுகையிட பிரஞ்சுக்காரர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். டொங்கின் மாகாணத்தின் வடக்கே சீன எல்லையை வளைந்துகொண்டு கடற்கரைப் பகுதியான கிழக்கு எல்லையையும் கைப்பற்றவும் திட்டம் போட்டிருக்கிறார்கள். இக் கடற்கரைப் பிரதேசம் இப்பொழுது வியட்நாம் குடியரசு சர்க்கார் வசமிருக்கிறது.

'போராட்டத்தில் வெற்றி பெறுவோம்'

டாக்டர் ஹோ சி மின்னின் குடியரசு சர்க்கார் ரேடியோ கீழ்க் கண்ட செய்தியை ஒலிபரப்பியது:-

பிரஞ்சுக்காரர்கள் எங்கள் மீது மும்முரமான போர் தொடங்கிவிட்டார்கள். வியட்நாம் மக்கள் பிரஞ்சு ஆக்கிரமிப்பை முழு பலத்துடன் எதிர்ப்பார்கள். வியட்நாம் துருப்புகளுக்கு போதிய பலமும் ஆயுதங்களும் இருக்கின்றன. பிரஞ்சு பலத்தை சமாளித்து போராட முடியும். பிரான்ஸில் உள்நாட்டுக் கஷ்டங்களும் பலவீனமும் அதிகரித்திருப்பதால் பிரஞ்சு சர்க்கார் வியட்நாம் குடியரசு சர்க்காருடன் யுத்தத்தில் வெகு நாள் நின்றபிடிக்க முடியாது. ஆதலால் எங்கள் பகைவர்களை எங்களால் தோற்கடிக்க முடியுமென்று நிச்சயமாக எண்ணுகிறோம்.

கொச்சின் சைனா தலைவர் கருத்து

கொச்சின் சைனா மாகாணத்தின் புதிய சர்க்காரின் தலைவராக இன்று காலை பதவியேற்ற ஜெனரல் சுவான்ஸ் சர்க்காரின் பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்:-

வடக்கு இந்தோ சைனாவில் பிரஞ்சு துருப்புகள் போர் ஆரம்பித்திருப்பதுகண்டு கொச்சின் சைனா சர்க்கார் மனக்[illegible] வியட்நாம் குடியரசை எதிர்க்கும் ஆயுதந் தாங்கிய காலோடாய், ஹோர்ஹோ ஆகிய இரு கோஷ்டிகளையும் கொச்சின் சைனா தலைவர் வியட்நாமியர்களுக்கு விரோதமாக ஏவிவிட மாட்டார்கள். அவர் உள்நாட்டு யுத்தத்தை விரும்பவில்லை. ஆனால்வியட்நாம்சர்க்காரைசாந்தப்படுத்த முயல்வார்கள். எங்களுக்கும் ஹோ சி மின்னுக்கும் லட்சியபேத முண்டேயொழிய அரசியல் வித்தியாசம் கிடையாது. நாங்கள் கம்யூனிஸ்ட் கொள்கையை வெறுப்பவர்கள்.

இந்தோ சைனாவில் வியட்நாம் தலைவர் ஹோ சி மின்னை அடக்கினால்தான் பிரஞ்சு யூனியனுக்குட்பட்ட சர்க்காரை நிறுவ முன்வர முடியுமென்று ஹாங்காங்கில் தேசப் பிரவுட வாழ்க்கை நடத்தும் அன்னமின் மாஜி மன்னர் பாவோடாய் பிரஞ்சுக்காரர்களுக்குத் தெரிவித்திருக்கக் கூடுமென்றும் அதனால்தான் வியட்நாம் குடியரசை ஒழிக்க பிரஞ்சுக்காரர்கள் ஒரேயடியான மும்முரமான யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் கருதப்படுகிறது.

இந்தோ சைனா முழுவதுமே வியட்நாம் குடியரசு பிரஞ்சுக்காரரை எதிர்ப்பதற்கு ஆதரவாக இருப்பதாக சென்ற வாரம் ஹோ சி மின் ரேடியோவில் தெரிவித்தார். வியட்நாம் சர்க்கார் சார்பாக பிரஞ்சுக்காரருடன் சமரசம் பேச பாவோடாய்க்கு அதிகாரமில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இன்று கொச்சின்சைனா தலைவர் பதவி ஏற்ற சுவான்ஸ், இந்தோ சைனாவுக்கு உள்நாட்டு சுதந்திரமும் வெளிநாட்டு விவகாரங்களில் பிரஞ்சு சர்க்கார் ஆதிக்கமும் ஏற்படுத்துவதைதான் ஆதரிப்பதாகத் தெரிவித்தார். இந்த அனுகுண்டு யுகத்திலே ஏராளமான ராணுவப் பயிற்சிக்கு இந்தோ சைனா செலவு செய்ய முன்வருவது முடியாத காரியமென்று அவர் கூறினார்.

பாரிஸின் கவனம்

பாரிஸ், அக். 9

இந்தோ சைனாவில் பிரஞ்சுத் துருப்புகள் மும்முரமான யுத்தம் ஆரம்பித்திருப்பது பற்றிய தகவல்களை இங்குள்ளோர் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். [ராய்ட்டர்]

பிரிட்டிஷ் தங்கம் மேலும் அமெரிக்கா போகிறது

12 கோடி டாலர்

டாலர் சரக்கு இறக்குமதி இன்னும் குறைக்கப்படுமென்கிறார் கிரிப்ஸ

வாஷிங்டன், அக். 9

டாலர் டஞ்சத்தைச் சமாளிக்க பிரிட்டன் அமெரிக்காவுக்கு மற்றும் 12 கோடிடாலர் பெறுமதியான தங்கத்தை விற்பனை செய்யுமென்று அமெரிக்க பொக்கிஷக் காரியாலயத்தார் தெரிவிக்கின்றனர்.

கிரிப்ஸ அறிக்கை

லண்டன், அக். 8

பிரிட்டனுக்கும் ஐரோப்பாவுக்கும் டாலர் கிடைக்கக்கூடிய நிலை இல்லாதிருப்பதால் டாலர் சரக்கு இறக்குமதியை இன்னும் குறைக்க வேண்டியதாக இருக்கிறதென பிரிட்டிஷ் பொருளாதாரமந்திரி கிரிப்ஸ இன்று பத்திரிகா நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

[illegible] பத்தி அதிகரித்திருக்கிறது. போலந்து பிரிட்டனுக்கு 3 கோடி முட்டைகள் அனுப்பியிருக்கின்றது.

கைத்தொழிற் சாலைகளுக்கு நிலக்கரி தேவைப்படுவதால் வீடுகளுக்கு நிலக்கரிப்பங்கீடுகுறைக்கப்படுமென்று நிலக்கரி மந்திரி தெரிவித்தார்.

அமெரிக்காவில்கட்டுப்பாடு

உலகப் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் பொருட்டு அமெரிக்காவில் யுத்தகாலத்தைப் போன்ற கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவது பற்றி அமெரிக்க சர்ககார் ஆலோசித்துவருகிறார்கள் என்று அமெரிக்க அந்நியநாட்டு உதவி மந்திரி ஐக்கிய தேச பொருளாதாரக் கமிட்டியில் தெரிவித்தார். (ராய்ட்டர்)

மேலும் ஆயிரம் பேர்!

வேலையில்லாக் கொடுமையால் வெளிநாடு சென்றனர்

கொழும்பு, அக். 9

இன்று மத்தியானம் கப்பல் மார்க்கமாக மேலும் ஆயிரம் பேர் சிங்கப்பூர் புறப்பட்டனர். இவர்கள் ராயல் பயனியர் கோரில் வேலை செய்வார்கள். ஏற்கெனவே இரண்டு கப்பல் நிறைந்த மக்கள் இங்ஙனம் புறப்பட்டுப் போயிருப்பதை நேயர்கள் அறிவார்கள்.

போக்கு வரத்துகள் சர்க்கார் மயமாகும்

பம்பாய் சர்க்கார் திட்டம்

பூனா, அக். 8

1948-வது வருடம் ஏப்ரல் மாதம் முதல் பம்பாய் மாகாணத்திலுள்ள ரஸ்தா போக்கு வரத்து சாதனங்களை சர்க்காரே ஏற்று நடத்த பம்பாய் சர்க்கார் மூன்று வருடத் திட்டத்தைத் தயாரித்திருக்கின்றனர்.

திரிகோணமலை மோட்டார் விபத்து

டிரைவர் உட்பட இருவர் இறந்தனர்

திரிகோணமலை, அக். 10

யாழ்ப்பாணத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்த திரிகோணமலை பிரதம தியணைக்கும் அதிகாரி திரு கே. ஸி. நடராஜாவின் குடும்பம் ஒருபலத்த மோட்டார் விபத்திற்குள்ளாகியது. அவரது மூத்த குமாரியான நடராஜா ராஜலட்சுமி காயங்களுக்காளாகி இறந்துவிட்டார்.

பொன்னம்பலம் என்ற பெயருள்ள ஒரு டிரைவர் காரை ஓட்டி வந்ததாகத் தெரிகிறது. ஹொறவப்பொத்தானைக் குச் சமீபத்தில் காரில்பழுதேற்பட்டு ஒரு மரத்தில் மோதியது. டிரைவர் ஸ்தலத்திலேயே இறந்து போய்விட்டார்.

திரு. கே. ஸி. நடராஜாவும் அவரது பாரியாரும் [illegible] யத்துமாறு [illegible]

லொறி விபத்தில் சிக்கியவர் மரணம்

கொழும்பு, அக் 9

கண்டி-குருணாக்கல் ரோட்டிலே நேற்று ஒரு ஆபத்தான லொறி விபத்து ஏற்பட்டது. இதன் காரணமாக கொடிகபால என்பவர் இறந்துபோனார்.

லொறி டிரைவர் லீசென்ஸ் இல்லாதவரென்றும் இப்போ விளக்க மறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

ரஷியாவிலிருந்து பிரிட்டனுக்கு உணவு

வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்ளபிரிட்டனின் ஆசை

லிவர்ப்பூல், அக். 8

உணவு மந்திரி திரு ஜாண் ஸ்ராட்ச்சி இன்று பிரிட்டனும் ரஷியாவும் தம் அரசியல் வேற்றுமைகளை மறந்து ஒரு புதிய வர்த்தக ஒப்பந்தம் செய்யவேண்டுமென்றும் அதன்மூலம் இரு நாடுகளுக்கும் அவைகளுக்குத் தேவையான பொருட்கள் கிடைக்கக்கூடியதாய் இருக்க வேண்டுமென்றும் கூறினார்.

ரஷியாவிலிருந்து இங்கிலாந்து வரவருக்கும் 70 லட்சம் டன் மாமிச உணவு வகைகளில் 54,000 டன் டின் மீன்கள் வந்து சேர்ந்துவிட்டன. அதைமாதிரி பார்த்த உணவு மந்திரி "இந்த ஆரம்ப ஆங்கில ரஷிய வர்த்தகம் வளர்ச்சியடைந்தால் ஒரு திருப்திகரமான வர்த்தக ஒப்பந்தம் மி[illegible] அவகி[illegible]ந்த ஆங்கில ரஷிய வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்து போனது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம் (ராய்ட்டர்)

இந்தியா முஸ்லிம்களுக்கு பாக்கிஸ்தான் கதவடைப்பு

புதுடில்லி, அக். 7

கிழக்கு பஞ்சாப்பைத் தவிர இந்தியாவிலுள்ள மற்ற இடங்களிலிருந்து வரும் முஸ்லிம் அகதிகளை பாக்கிஸ்தானுக்குள் அனுமதிக்க முடியாதென பாக்கிஸ்தான் பிரதம மந்திரி லியாகத் அலிகான் இந்திய சர்க்காருக்கு அறிவித்துவிட்டார்.

சென்னை மந்திரி சபை நெருக்கடி ஏற்படுமா

சட்ட சபை காங்கிரஸ் கட்சிக்கு தோல்வி

ஜமீன்தாரி ஒழிப்பு மசோதாவில் தகராறு

சென்னை, அக். 8

இன்றிரவு ஜமீன்தாரி ஒழிப்பு மசோதா பற்றி சென்னை காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் விவாதம் நடைபெற்றபோது மந்திரிகள் கட்சிக்கு தோல்வி ஏற்பட்டது. இந்த மசோதாவில் தர்ம சம்பந்தமானதும் மத சம்பந்தமானதுமான இனாம் நிலங்களை சேர்க்க வேணடாமென்று மந்திரி கட்சியார் வாதாடினர். ஆனால் மாஜி சென்னை பிரதம மந்திரி டி. பிரகாசமும் அநேக ஆந்திர அங்கத்தினர்களும் அந்நிலங்களையும் மசோதாவில் சேர்க்க வேண்டுமென்றனர். ஆகவே இத்தகராறானது வாக்கெடுக்கப்பட்டபோது மந்திரிகட்சிக்கு 76 வோட்டுகளும், பிரகாசம் கட்சிக்கு 81 வோட்டுகளும் கிடைத்தன. மொத்தமுள்ள 194 காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்களில் கூட்டத்திற்கு 150 அங்கத்தினர் வந்திருந்தனர் இவர்களில் 7 அங்கத்தினர் நடுநிலைமை வகித்தனர்.

இக்கூட்டம் சர்க்கார் மாளிகையில் விருந்து மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம மந்திரி ஓமந்தூர் பி. ராமசாமிசெட்டியார் சிதம்பரம் சென்றிருப்பதால் ரெவன்யூ மந்திரி காளா வெங்கட்டராவ் தலைமை வகித்தார். இம்முடிவை ஆட்சேபித்து மதுரைபிரபல காங்கிரஸ்வாதியான திரு ஏ. வைத்தியநாத ஐயர் சட்டசபையிலிருந்தும் சட்டசபை காங்கிரஸ் கட்சியிலிருந்தும் தனது அங்கத்தினர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

இதனால் மந்திரி சட்சிக்கு விரோதமான நிலையிருந்து வருவதாகக் கருதுவதற்கில்லையென்று பொதுவாகக் கருதப்படுகிறது ஆனால் ஆந்திர அங்கத்தினர்களில் ஒருசாரார் இந்தப் பாதகமான முடிவால் மந்திரிசபை நெருக்கடி ஏற்படுமென்று கூறுகின்றனர். [அ-பிரஸ]

மதத்தைத் தழுவிய அரசாங்கத்துக்கு ஆட்சேபம்

பாலஸ்தீன கமிட்டியில் எகிப்து பிரதிநிதி விவாதம்

அராபிய லீக் கூட்டத்திற்கு கிரான்ட் முப்தியும் எகிப்திய மன்னரும் பயணம்

ஜெருசலேம், அக். 8

இன்று கிரான்ட் முப்தி எகிப்து மன்னருடன் லெபானனில் நடைபெறும் அராபிய லீக்கூட்டத்தில் கலந்து கொள்ள கெய்ரோவிலிருந்து பெய்ரூத் நகருக்கு விமானமார்க்கமாகப் புறப்படடுச்சென்றார். பாலஸ்தீனத்திலிருந்து பிரிட்டன் வெளியேறினால் அங்குள்ள அராபியரின் பாதுகாப்பைக்குறித்து ஆலோசிக்க அவர் செல்கிறார்.

பலஸ்தீன் சர்க்கார் பிரதம காரியதரிசி சர் ஹென்றிகுர்னி இன்று எல்லா இலாக்கா தலைவர்களையும் வரவழைத்து மூன்றுமணி நேரம் ஆலோசனை நடத்தினார். பாலஸ்தீனத்திலிருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்காரின் உத்தரவு கிடைத்ததும் உடனே எல்லா பிரிட்டிஷாரும் வெளியேறுவதற்கு 30நாட்களுக்குள் ஒருதிட்டத்தைத்தயாரித்துக் கொடுக்கும்படி அவர் உத்தரவிட்டார்.

26 பிரிட்டிஷ் துருப்புகளுக்கு காயம்

6-வது பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த பாரசூட் துருப்புகள் மூன்று லொறிகளில் ஹைபாவுக் கருகே மலை ரோட்டில் செல்லும்போது ஒரு வெடிகண்ணி வெடித்ததால் 26 பேர்கள் காயமடைந்தனர்.

பாலஸ்தீன்கமிட்டி விவாதம்

நியூயார்க், அக். 9

நேற்று ஐக்கிய தேச பாலஸ்தீன் கமிட்டியில் விவாதம் நடைபெற்றபோது பாலஸ்தீன் பிரிவினை, பொருளாதார ஐக்கியம், யூதர் குடியேற்றம்இவை சம்பந்தமாக 11 நாடுகள் கமிட்டியின் மெஜாரிட்டி அறிக்கையை போலந்து பிரதிநிதி ஆதரித்துப் பேசினார்.

நேற்றைய கூட்டத்தில் முதலாவதாக இவர் பேசினார். செவ்வாய்க்கிழமை இரண்டு மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில் முழுநேரமும் பாக்கிஸ்தான் பிரதிநிதி பேசினார் இந்தியா, ஈரான், யூகோஸலவியா ஆகிய நாடுகளின் மைனாரிட்டி அறிக்கையை போலந்து பிரதிநிதி ஆதரிக்கவில்லை. யூதர் அராபியர் ஒத்துழைப்பைத்தான் விரும்புவதாகவும் ஆனால் அது சாத்தியமில்லை யென்றும் போலந்து பிரதிநிதி தெரிவித்தார்.

ஐரோப்பாவில் வேட்டையாடப்படும் யூதர்கள் மீது தனக்குப் பரிதாபமிருப்பதாகத் தெரிவித்து செக்கோஸலவியா பிரதிநிதி மெஜாரிட்டி அறிக்கையை ஆதரித்தார். அவர்களிடம் மகத்தான அராபிய சமுதாயம் அனுதாபம் காட்டவேண்டுமென்று அவர் தெரிவித்தார்.

யூதர்கள் மீது அராபியர்களுக்கு விரோதமில்லை யென்றும் ஆனால் அவர்களது ஜியோனிச இயக்கம் அராபிய மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கிறதென்றும், மற்றநாட்டு மக்களின் பழியை அராபியர்கள் சுமக்கவேண்டியதில்லை யென்றும், பாலஸ்தீனத்தில் ஜனநெருக்கம் அதிகமாகி விட்டதென்றும் எகிப்திய பிர[illegible]

பாலஸ்தீனத்தின் எதிர்காலத்தை நிச்சயிக்க ஓர் ஒப்பந்தத்திற்கு வரும்படி யூதர் ஏஜன்ஸியின் மூன்று பிரதிநிதிகளும் அராபிய உயர்கமிட்டியின் மூன்று பிரதிநிதிகளும் கூடி ஒரு அறிக்கை தயாரித்து ஐக்கியதேச அசெம்பிளியில் சமர்ப்பிக்கும் படி சால்வடார் பிரதிநிதி ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அத்துடன் கமிட்டி இன்றைக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ராய்ட்டர்)

போர்ச்சுகலில் புரட்சி

கடற்படை, ராணுவ தலைவர்கள் கைது

லிஸ்பன், அக். 8

போர்ச்சுகலில் ராணுவ அதிகாரிகள் ஸலஸாரின் சர்க்காருக்கு விரோதமாகப் புரட்சி செய்தனர். இந்த வருடம் நடைபெற்ற புரட்சிகளில் இது மூன்றாவது புரட்சியாகும். இது சம்பந்தமாக ஒரு கடற்படைத் தலைவரும் 5 ராணுவத் தலைவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ராணுவ, கடற்படை அதிகாரிகள் 350 பேர்கள் போர்ச்சுகல் பிரதம மந்திரி டாக்டர் ஸலஸாரின் அரசாங்கத்தைக் கவிழ்க்க புரட்சி செய்தார்கள். சிறைச்சாலைகளிலெல்லாம் ஏராளமான அரசியல் கைதிகள் நிறைந்திருப்பதால் இப்பொழுது கைது செய்யப்பட்ட 6 பேர்களும் லிஸ்பனுக்கருகிலுள்ள ஓர் தனிப்பட்ட கட்டிடத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். கைதியானவர்களில் ஒருவர் 1946 வருடத்திய தற்காலிக சர்க்காரின் தலைவராக இருந்தவர். மற்றும் புரட்சியில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்ய முயற்சி நடைபெறுகிறது இப்புரட்சிக்காரர் முடியரசு இயக்கத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று ஸ்பெயின் மூலம் கிடைத்த தகவலின் மூலம் போர்ச்சுகல் சர்க்கார் இந்த சதியைக் கண்டுபிடித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தட்டாத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஹு புரட்டாசி மீ 24உ
வெள்ளிக்கிழமை

தேசத் தொண்டா? அல்லது சம்பளமா?

சென்ற புதன்கிழமை புதிய மந்திரி சபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மந்திரிகள், தலைவர்கள், பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்கள், செனட்டர்கள் ஆகியவர்களின் மாதப்படிகளும், அலவன்ஸுகளும் ஆலோசிக்கப்பட்டன (1) பிரதம மந்திரிக்கு மாதமொன்றுக்கு வேதனம் ரூபா 1500, விருந்து அலவன்ஸ ரூபா 1500; (2) மந்திரிகள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு வேதனம ரூபா 1500, விருந்து அலவன்ஸ் ரூபா 500; (3) பாராளுமன்றக் காரியதரிசிகள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு வேதனம் ரூபா 1000; (4) சாதாரண பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு வேதனம் ரூபா 600; (5) செனட்டர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு வேதனம் ரூபா 400 எனவும் கூட்டத்தில் மந்திரிகள் திட்டம் போட்டுள்ளதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களினின்றும் அறியக்கிடக்கிறது. இத்திட்டம் பிரதிநிதிகள் சபையில மிகவும் சீக்கிரத்தில் அங்கீகாரத்திற்குச்சமர்ப்பிக்கப்படும்

இத்திட்டத்தின்படி மந்திரிகளுக்கும் மற்றும் தேசத்தொண்டர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்ளுபவர்களுக்கும் வேதனங்கள் பிரதிநிதிகள் சபையில் அங்கீகரிக்கப்படுகொடுக்கப்படுமாயின் இலங்கை குட்டிச்சுவராகி நியூஸிலாந்தின் கதியை அடையுமென்பதற்கு அறிகுறியென்றே நாம் கூசாமற் சொல்லிவிடலாம்.

பழைய சட்டசபை, சட்ட நிரூபண சபை முதலியவற்றிற்கு தேச மக்களால் தெரிவு செய்யப்பட்டு அனுப்பிய பிரதிநிதிகள் பெற்ற சம்பளம் என்ன? அவர்கள் சட்டசபை நிகழ்ச்சிகளில் பங்கு பற்றும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா டதனைந்துதான் கொடுக்கப்பட்டது. அக்காலங்களிற்தான் ஸர். பொன்னம்பலம் இராமனாதன், ஸர். பாரன் ஜயதிலகா, ஸர். ஜேம்ஸ் பீரிஸ் முதலிய உண்மைத் தேசத் தொண்டர்கள் இருந்தார்கள் என்பதையும் நாம் மறத்தல் கூடாது. அக்காலத்துப் பிரதிநிதிகளிடம் கைலஞ்சம் என்ற பேச்சே கனவிலும் கிடையாது.

இந்த வகையாகக் கூட்ட நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா பதினைந்து பெற்றுப் பிரதிநிதிகளாகவிருந்து தொண்டாற்றக்கூடியவர்கள் பெரும் பணக்காரர்களாய்த்தான் இருந்திருக்கவேண்டும். பணவருவாயிலாத தேசாபிமானிகள், அறிவாளிகள் பிரதிநிதிகளாகத் தேசத் தொண்டு செய்ய முடியாத நிலைமை சில சமயங்களில் நிலவியதும் உண்டு.

இதன் காரணமாக டொனமூர் திட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட அரசாங்க சபையில் பிரதிநிதிகளுக்கு ரூபா 500ம் மந்திரிகளுக்கு ரூபா 1500ம் வழங்கப்பெற்றன பெருஞ்சம்பளம் பெற்றுக்கொள்ள வசதி கிடைத்ததும் அரசாங்க சபைக்கு பிரதிநிதிகளாய் தெரிவுசெய்யப்படுவதற்கும், பின் மந்திரிகளாய் நியமிக்கப்படுவதற்கும் அபேட்சகர்கள் செய்த செலவுகள் இம்மட்டம்மட்டல்ல ஏன்? முன் செலவுசெய்த பணத்தைப் பின் சம்பளமாகப் பெற்றுக்கொள்ளலாமென்று தெரிந்தபடியாற்தான். இக்காரணத்தால் ஒரு நாட்டின் பிரதிநிதிகளாக இருக்கத் தகுதியற்ற எத்தனையோ பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்பட்டது நம்மவரெல்லாருக்கும் தெரியும். அவர்கள் அரசாங்கசபைப் பிரதிநிதிகள் என்ற முறையில் கைலஞ்சம் வாங்கிய குற்றத்திற்காகவும் கலைக்கப்பட்டதும் எவரும் மறந்துவிடக்கூடியதல்ல.

யுத்த காலத்தில் இலங்கையின் பண வருவாய் நல்ல நிலைமையில் இருந்தது. இனியும் அப்படியிருக்குமென்று நாம் நினைத்தற்கில்லை. அதுவுமல்லாமல் இலங்கையின் விவசாய நிலைமையோ மிகவும் கேவலமாக இருக்கின்றது. யுத்த காலத்தில் பல படைகளிலும் வேலை செய்தவர்கள் வீடு திரும்புகின்றார்கள். அவசர காலக் காரியாலயங்கள் யாவும் மூடப்படுகின்றன. இதன் காரணமாக வேலையில்லாத் திண்டாட்டம் தினமும் கூடிக்கொண்டே போகின்றது. மக்கள் ஒரு நேரத்திற்காவது போதிய உணவு பெற்றுக் கொள்ளும் வசதியில்லை. அத்தியாவசிய பொருட்களை அகவிலை கொடுத்தே பெற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. நாட்டில் பஞ்சமும் பசியும் தாண்டவமாடுகின்றது. இந்த சீர்கெட்ட நிலைமையில் மந்திரிகளுக்கும் மற்றவர்களுக்கும் இப்பொழுது ஆலோசிக்கப்பட்டிருக்கின்ற திட்டத்தின்படி மாத வேதனம் கொடுத்தால் இந்தச் சின்னஞ் சிறிய இலங்கைதீவு இப் பணப் பளுவைச் சுமக்குமா என்றுதான் கேட்கின்றோம்.

பாராளுமன்றப் பிரதிநிதிகளே! உங்கள் கண்களைத் திறவுங்கள். அண்டை அயல் நாடாகிய இந்தியாவில் ஒரு மந்திரி மாதச் சம்பளமாகப் பெறுவது எவ்வளவு குறைவாக இருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். மந்திரிகளதும் உங்களதும் சம்பளத்தைக் கூட்டுவது மாத்திரம் தேசத் தொண்டென்று நினையாதீர்கள். இத் திட்டம் விவாதத்திற்குப் பிரதிநிதிகள் சபையில் வரும்பொழுது நீங்கள் ஒவ்வொருவரும் எதிர்த்து மந்திரிகளுக்குப் புத்தி வருமாறு செய்வீர்களெனத் தேச மக்கள் காத்திருக்கின்றார்கள்.

கலாவீவ பார்லிமெண்ட் அங்கத்தினர் மீது வழக்கு

துப்பாக்கி காட்டிப் பயமுறுத்தினராம்

அநுராதபுரம், அக். 9

கலாவீவப் பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. எஸ். எச். மஹாதியுல்வேவா மீது எம். சியது என்பவரால் ஒரு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

தாம் இல்லாத சமயம் வீட்டுக்கு வந்து தமது மகனைத் துப்பாக்கியை நீட்டிப் பயமுறுத்தி 45 மூடை நெல்லை பலவந்தமாகப் பறித்துச் சென்றதாக அவரால் குற்றம் சாட்டப்பட்டது.

எம். எச். செனிவிரத்ன, பி. பி. மனம்பீலி என்பவர்கள் அவருக்கு உடந்தையாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

அக்டோபர் 11 க்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சட்டவிரோதமாகப் பந்தயம் பிடித்தவர்

150 ரூபா அபராதம்

கொழும்பு, அக். 9

கொழும்பு ரேஸ சம்பந்தமாக ரூ ஒன்று சட்டவிரோத பந்தயக் காசாகப் பெற்றுக் கொண்ட பொரளை வாசியான பி எஸ். ஜயசேன தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதன்பேரில் அவனுக்கு ரூபா 150 அபராதம் விதிக்கப்பட்டது.

ரப்பர் கள்வருக்குச் சிறைத் தண்டனை

கொழும்பு, அக். 9

கும்பனித்தெரு கீல் அன்ட் வாலடாக் கம்பெனியுள் புகுந்து 1500 ரூபா பெறுமதியான ரப்பர் ஷீட்களைக் களவாடியதாகத் தொடரப்பட்ட வழக்கில், எதிரிகளான ஸி. எம். சைமன் டபிள்யூ. பொடிமகாத்மயா ஆகிய இருவர் மீதும் ஒவ்வோர் வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

வீரனும் முனிவரும் ஒன்றாக அமைந்த அவதாரம்

மகாத்மாவுக்கு சைனாவின் புகழ்மாலை

கல்கத்தாவுக்கும் பின் டில்லியிலும் பூரண அமைதியை நிலைநாட்டிவிட்டார்

இனி பாக்கிஸ்தானுக்குச் செல்லக் கோரிக்கை

புதுடில்லி, அக். 8

நாங்கிங்கில் காந்தி ஜெயந்தி கொண்டாட்டம் சம்பந்தமாக இந்திய ஸ்தானீகர் அளித்த விருந்தில் இந்தியாவில் சீனஸ்தானீகராக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் லோகியாலன் மகாத்மாவைப் பாராட்டிப் பேசியதாவது:-

"மகாத்மா காந்தி இந்திய சுதந்திர சிருஷ்டிகர்த்தா மட்டுமல்ல; அவர் இந்தியரின் அறிவையும் மேம்படச் செய்திருக்கிறார். அவர் சாதாரண மனிதன்; அசாதாரண சக்தியைக் கண்டுபிடித்து அதைமுழுவதும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்திய காங்கிரஸ கட்சியை ஒரு புரட்சிகரமான ஸ்தாபனமாக ஆக்கியதோடல்லாது அதை இந்திய மக்களின் ஹிருதய கோவிலாகச் செய்திருக்கிறார். அவருடைய வெற்றிகரமான சுதந்திர இயக்கம் உலகையே ஆச்சரியப்படும் படி செய்துவிட்டதோடல்லாமல் சிறந்த ராஜ தந்திரிகளையும் தோற்கடிக்கச் செய்து விட்டது. அவர் லட்சிய வாதியும் அரசியல் வாதியுமாவார். அவர் வீரனும் முனிவனும் ஒன்றாயமைந்த அவதார புருஷர்; அவர் மனிதஇயற்கையை நன்கு அறிந்தவர். சமூக ஊழியர். மததூதர்-ராஜதந்திரியுமாவார். மொத்தத்தில் அவர் ராஜரிஷியே.

காந்திஜியுடன் டாக்டர் லோஹியா சம்பாஷணை

புதுடில்லி, அக் 7

பிஹார் நிதிமந்திரி ஸ்ரீ அனுக்ரஹ நாராயண சின்ஹா நேற்று மகாத்மா காந்தியைச் சந்தித்து சர்வதேச உணவு மகாநாட்டு விபரங்களைப் பற்றி கூறியதாகத் தெரிகிறது. பண்டித கோவிந்த வல்லபபந்தும், ஸ்ரீ என். வி. காட்கிலும் இன்று காந்திஜியைச் சந்தித்தனர்.

ஸ்ரீ ஜெயராம்தாஸ துவர்க்கதாஸ இன்று காந்திஜியை இருதரம் சந்தித்தார் அகதிகள் வேலை சம்பந்தமாக அவர் இவ்வாரம் லாகூர் பிரயாணமாவார் எனத் தெரிகிறது.

சோஷியலிஸ்ட தலைவர் டாக்டர் ராம் மனோஹர் லோகியா இன்றுமாலை காந்திஜியைச் சந்தித்துப் பேசினார்.

காந்திஜியுடன் பட்டேல்-ஆஸாத் பேட்டி

புதுடில்லி, அக். 7

மகாத்மா காந்தியை இன்று சர்தார் வல்லபாய் பட்டேலும் மௌலானா அபுல்கலாம் ஆஸாதும் சந்தித்துப் பேசினர்.

பாக்கிஸ்தான் போக வேண்டும்

புதுடில்லி, அக். 8

இன்று மகாத்மா காந்தி பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியபோது ஒருவர் கேட்ட கேள்விக்கு மகாத்மா பின்வருமாறு பதிலளித்தார்:-

நான் பாக்கிஸ்தான் செல்வதற்காக இங்கு வந்தேன். டில்லியிலுள்ள நீங்கள் எல்லோரும் அமைதியாக இருப்பீர்கள் என்று சபதம் செய்தால்தான் நான் பாக்கிஸ்தானுக்குப் புறப்பட முடியும்.

அவசரக் கமிட்டி கலைக்கப்பட்டது

கலகத்தை முன்னிட்டு அமைதியை நிலைநாட்ட நியமிக்கப்பட்ட மந்திரி சபை அவசரக் கமிட்டி கலைக்கப்படலாமென்று இன்று முடிவு செய்யப்பட்டது. டில்லியில் பூரண அமைதி ஏற்பட்டுவிட்டதென்றால் அதனால சந்தோஷப்படுவதாகவும் கமிட்டித் தலைவர் தெரிவித்தார்.

காந்திய நிர்மாண வேலைத் திட்டம் அவசியம்

திண்டுக்கல், அக். 7

பம்பாய் பிரதமர் ஸ்ரீ பி. ஜி கேர்ளால்தான் காந்தி கிரஹத்தை ஆரம்பித்து வைக்க சின்னாளப்பட்டிக்குச் செல்லும் வழியில் இன்று காலை இங்கு வந்திறங்கினார். நல்ல வரவேற்பு நடந்தது.

ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே ஒரு கூட்டத்தில் ஸ்ரீ கேர் பேசுகையில் "மகாத்மாஜியின் தலைமையில் அஹிம்சை முறையால் நாம் சுதந்திரமடைந்தோம். ஆகஸ்டு 15 ம் தேதி நமது லக்ஷியம் சித்தியானவுடன் நாம் காந்திஜியையும் அவரது லக்ஷியங்களையும் மறந்து மிருகங்களைப்போல் ஒருவருக்கொருவர் சண்டையிட ஆரம்பித்துவிட்டோம். நமக்கு மகத்தான பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. காந்திய நிர்மாண வேலை முறைகளை அநுசரித்து நாம் நமது தேசத்தைப் புது அடிப்படையில் சிருஷ்டிக்க வேண்டும். நீங்கள் ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டுவது அவசியமாகும்" என்றார்.

ஸ்ரீ முனிசாமி, டாக்டர் சௌந்திரம் ராமச்சந்திரனுக்கு கஸதூரிபாய் நிதிக்காக ரூ. 500 முடிப்பொன்று அளித்தார். இந்தப் பணம் ஸ்ரீ முனிசாமிக்கு அவரது தியாகங்களுக்காக சுதந்திர தினக் கமிட்டி வழங்கிய பண முடிப்பின் ஒரு பாகமாகும்.

அந்த நன்கொடைக்காக டாக்டர் சௌந்திரம் ஸ்ரீ முனிசாமிக்கு வந்தனங் கூறினார். பிறகு ஸ்ரீ கேர் முதலியவர்கள் சின்னாளப்பட்டிக்குப் புறப்பட்டனர்.

வேலைகொடுக்காத முதலாளிகள் மீது வழக்கு!

மாஜி ராணுவத்தினர் செய்துள்ள புகார்

கொழும்பு, அக். 9

டரட் ரோட்டைச் சேர்ந்த கெராட் விஜயக்கூன் மருதானையைச் சேர்ந்த பொரோலிஸபெர்ணண்டோ, திரு. எஸ். எச். மூஸாஜி ஆகியோர் மீது அவர்களின் பழைய வேலையாட்களும், ராணுவத்தில் வேலைசெய்து இப்போது மீண்டும் வந்திருப்பவர்களுமான ஜே எச். ஜேம்ஸ் எல். பொடி அப்புஹாமி, தவான் நயிம் பக்கீர் ஆகியோர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். தாங்கள் ராணுவத்தில் இருந்து விடுபட்டுவந்த பின் தம்மைப் பழையபடி மேற்படி முதலாளிகள் வேலைக் கமர்த்தவில்லை என அவர்கள் புகார் செய்கின்றனர்.

மேற்படி வழக்குகள் அக்டோபர் 22-ம் தேதி விசாரிக்கப்படும்

"பசியைத் தாங்காது களவாடினேன்"

கோர்ட்டில் வாலிபனின் வாக்குமூலம்

கொழும்பு அக். 9

இருபத்திரண்டு வயது நிரம்பிய ஷரீப் முகம்மது தாஹிர் என்ற வாலிபன் வெள்ளவத்தை ஆரிய சிங்கள ஸடோரில் இருந்து 38 கெஜ்ஷர்ட் துணியைக் களவாட முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தான் குற்றவாளி என்பதை ஒப்புக்கொண்டான்.

பசியின் கொடுமை தாங்காமலே தான் அவ்வேலையைச்செய்ய நேர்ந்தது என்றும் அவனால் கூறப்பட்டது.

களவாட முயற்சிக்கப்பட்ட துணியின் விலை ரூபா 149-72 ஆகும்

எதிரி அக்டோபர் 15-ம் தேதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டான்.

ஜப்பானுக்கு இந்தியா பருத்தி

கராச்சி, அக். 8

'தப்தி' என்ற கப்பலில் 29,857 பேல் பருத்தி ஏற்றப்பட்டது. ஜப்பானிலுள்ள கோபே நகருக்கு இது செப்டம்பர் 29-ம்தேதி புறப்பட்டுச் சென்றது. ஜப்பானிலிருந்து சரக்குகளை ஏற்றிக்கொண்டு அது திரும்பும்.

மூன்று கப்பல்களில் கியூபா சீனி

புதுடில்லி, அக். 8

மூன்று கப்பல்களில் கியூபாவிலிருந்து 30,000 பெரிய டன் சீனி அக்டோபர் மாதம் இந்தியாவில் வந்திறங்கும். இந்தியா வெளிநாட்டிலிருந்து சீனி வரவழைப்பது இதுவே முதல் தடவையாகும். (அ-பிரஸ்)

கட்டுப்பாட்டதிகாரியின் பிரிவிக் கவுன்சில் மனு

சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கு ஆட்சேபனை

கொழும்பு, அக். 9

எம். மொகமத்மியா ஏ. ஆர். எல். எம். தாசீம் என்போரின் ஜவுளி லைசென்ஸை ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி ரத்துச் செய்திருந்தார். மேற்படி கட்டளைகளைத் தள்ளுபடிசெய்யும்படி பிரஸ்தாப வியாபாரிகள் கேட்டுக்கொண்டு சுப்ரீம் கோர்ட்டுக்கு மனுச்செய்தனர். அதன்படியே ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரியின் கட்டளை தள்ளுபடி ஆயிற்று.

இத்தீர்ப்பை ஆட்சேபித்து ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி பிரிவிக் கவுன்ஸிலுக்கு அப்பீல் சமர்ப்பிக்கும் நோக்கத்துடன், ஜஸ்டிஸ் டயஸ முன்னிலையில் இரு மனுக்கள் தாக்கல் செய்திருக்கிறார்.

சட்ட விரோத ரேஸ பந்தயம்

எதிரிகள் பிணையில் விடப்பட்டனர்

கொழும்பு, அக். 9

கொழும்பு ரேஸ சம்பந்தமாக சட்ட விரோதப் பந்தயம் நடத்திச் சதிசெய்ததாக இருவர்மீது கோர்ட்டில வழக்குத் தொடரப்பட்டது.

அவர்களில் ஒருவர் 3 சட்ட விரோதப் பந்தயங்களை ஏற்றுக் கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. எதிரிகள் தாங்கள் நிரபராதிகள் எனக் கூறினர்.

இருவரும் ரூபாய் 500 பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். விசாரணை அடுத்த 20-ம் தேதி நடைபெறும்.

டச்சு- இந்தோனேஷியா சமரசக் கமிஷன்

நியூயார்க், அக். 8

டச்சு-இந்தோனேஷியா தகராறை சமரசமாகத் தீர்க்க பாதுகாப்புக் கவுன்ஸில் நியமித்த மூன்று நாடுகளின் கமிஷன் பிரதிநிதிகள் கிழக்கிந்திய தீவுகளுக்குப் பயணமாக விமான வசதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம் ஆகிய இந்த மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் இன்று இங்கு கூடிப்பேசினார்கள். இவர்களது அடுத்த கூட்டம் சிட்னி நகரில் நடைபெறும். [ராய்ட்டர்]

டாக்டர் விக்கிரமசிங்காவை தாக்கிய வழக்கு

காலி டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

காலி, அக் 9

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவைத் தாக்கியதாக ஓர் வழக்கு காலி உதவி மாஜிஸ்டிரேட் முன்னிலையில் தொடரப்பட்டதல்லவா? இவ் வழக்கு சம்பந்தமாக நடந்த விசாரணையின்போது காலி நீதிபதி என். எம். ஜே. ராஜேந்திரன் சாட்சியம் அளித்தார் வழக்கு டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்குப்பாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கில் முதலாவது எதிரி சரம் ரத்னாயக்க டாக்டரை அடித்து, அவரிடம் இருந்த ரூபாய் 500 பெறுமதியான ஒலிப்பெருக்கிக் கருவியைக் களவாடியதாகக் குற்றம் சாட்டப்பட்டான். இன்னோர் எதிரியான சொக்கலிங்கம் என்னும் பொடியன் டாக்டரின் காருக்கு பழுதேற்படுத்தி ரூபாய் 50 பெறுமதியான நஷ்டம் விளைவித்ததாகச் சொல்லப்பட்டது. இன்னோர் எதிரி ரூபாய் 200 பெறுமதியான டாக்டரின் கைக்கடிகாரத்தைக் களவாடியதாகக் கூறப்பட்டது.

மொத்தம் எட்டுப் பேர் இவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்கள்.

மவுண்ட் பேட்டனுக்கு பேரப் பிள்ளை ஜனனம்

லண்டன், அக். 8

இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டனின் மூத்த புத்திரிபாட்ரிஷியாவுக்கு இன்று ஓர் ஆண்குழந்தை பிறந்தது. தனது முதலாவது பேரப்பிள்ளை ஜனனச் செய்தி லார்டு மவுண்ட் பேட்டனுக்கு அறிவிக்கப்பட்டது. யுத்த காலத்தில் தென்கிழக்கு ஆசியா தளபதி ஜெனரல்ஸலி முக்குமெய்ப்பாது காவலராக இருந்த லார்டு பிராபோர்னை, அப்பொழுது கடற்படை பெண் தொண்டர் படையிலிருந்த பாட்ரிஷியா சந்தித்துக் காதலித்தார். சென்ற அக்டோபர் 26-ம் தேதி நியூபாரஸடிலுள்ள ராம்சே சர்ச்சில் கலியாணம் செய்து கொண்டார். இருவருக்கும் வயது 23.

(ராய்ட்டர்)

சிங்களக் கொடியா இலங்கையின் தேசீயக் கொடி

வட மாகாணத்தில் பரபரப்பு

திரு. சேனநாயக்காவுக்கு யூ. என். பி. தமிழ் பிரமுகர்கள் தந்திகள்

யாழ்ப்பாணம், அக். 8

"சிங்கக்கொடி இலங்கையின் தேசியக்கொடியாக்கப் படுவதை யாழ்ப்பாணப் பொதுஜனங்கள் பலமாக ஆட்சேபிக்கிறார்கள். இலங்கையின் தேசியக்கொடியைப் பாராளுமன்றச் சபையினர் நிர்ணயிக்கும்வரை, சிங்கக்கொடியைப் பறக்கவிடுவதை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்."

இவ்வாறு யாழ்ப்பாண நகர சபையின் தலைவரும், யூ. என். பிக் கட்சியின் யாழ்ப்பாண அங்கத்தவருள் பிரபல்யமுள்ளவருமான திரு. ஸி. பொன்னம்பலம் ஒருதந்தியை பிரதம மந்திரிதிரு. டி. எஸ். சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ளார்.

கையில் வாளேந்திய சிங்கச் சின்னம் பொறிக்கப்பட்ட ஐம்பதினாயிரம் கொடிகள் இலங்கைக்கு வந்திருப்பதாயும், பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையின் திறப்புவிழாவின்போது, அவை அரசாங்கக் கட்டிடங்களிலெல்லாம் ஆங்கிலேயரின் கொடியாகிய யூனியன் ஜாக்கின் அருகில் பறக்க விடப்படும் என்றும் வெளியான செய்தி வடமாகாணத்தில் மிகுந்த பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு சில யூ என். பிக் தமிழர்கூட ஆத்திரப்படுவதாகவே காணப்படுகின்றனர்.

ஒரு யூ. என். பிக் தமிழர் "இந்த மாதிரிச் சிங்கள இராஜ்யம் ஏற்படுத்தவா நாம் இவர்களுக்குத் தேர்தலில் வேலைசெய்தோம்; திரு. மகாதேவா தோற்றது நல்லதாய்விட்டது; அல்லாது போனால் எங்கள் கை விரலே எங்கள் கண்களைக் குத்தச் செய்வித்ததைப்போன்றாகி விடும்" என்று மிகுந்த கோபத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல வாசிகசாலையில் கூறினார்.

வழக்கறிஞர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் பின்வருமாறு ஒரு தந்தியை திரு. சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ளார்:-

"இலங்கையிலுள்ள எல்லா வகுப்பினருக்கும் சம்மதமான ஓ தேசியக் கொடியைத் தீர்மானிக்கும்வரை, சிங்கக் கொடிகளைப் பறக்க விடுவதைத் தயவு செய்து தவணையிடுங்கள்."

உற்பத்தியைப் பெருக்குவதில் முனைக; நேருவின் வேண்டுகோள்

இந்திய சர்க்கார் பல பெரிய கைத்தொழில் அபிவிருத்தி திட்டங்களை வைத்திருக்கிறது

இவைகளின் மூலம் 5, 6 வருஷங்களுக்குள் தேசத்தின் தோற்றமே மாறிவிடலாம்

புதுடில்லி, அக். 6

பொருள் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்தால் வாழ்க்கைப் பொருட்களை வாங்கி உபயோகிப்பதற்கு வேண்டிய சக்தி ஜனங்களுக்கு ஏற்படும். உற்பத்தியாகும் செல்வத்தை இன்னும் நீதியான முறையில் பங்கிடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியதே. ஆனால் ஓரளவு உற்பத்தி பெருகிய பின்னரே இது சாத்தியமாகும்.

"இந்த தேசத்தைக் கைத்தொழில் மயமாக்குவதற்காக மின்சார உற்பத்தி சம்பந்தமாக சர்க்கார் 15 முதல் 20 பெரிய திட்டங்களை வைத்திருக்கின்றனர். இந்த திட்டங்கள் அமுலுக்கு வந்தால் அது 5, 6 வருஷங்களுக்குள் இந்தியாவின் தோற்றத்தையே மாற்றிவிடும்" என்று இன்று இங்கு நடந்த பொதுக்கூட்டமொன்றில் பேசிய பண்டித ஜவஹர்லால் நேரு கூறினார்.

கான்ஸ்டபிளைத் தாக்கித் தலைமறைவாய் இருந்தவர்

பார்லிமெண்ட் அங்கத்தினரால் போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

களுத்துறை, அக். 9

பையகலைப் போலிஸ சேர்ந்த சமரக்கோன் என்ற போலிஸ கான்ஸடபிளைக் கத்தியால் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தியப்பு என்பவர் போலிசார் கண்ணில் விழாது தலை மறைவாக இருந்து வந்தார். அவர் இப்போது களுத்துறைப் பகுதிப் பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. சிகுணவர்த்தனவால் போலிசாரிடம் கொண்டுவந்து ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரங்கூன் கொலை வழக்கு

லண்டன் பாரிஸ்டர் வருகிறார்

ரங்கூன், அக். 8

பர்மா மந்திரிகள் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக மாஜி பிரதமர் ஊசா முதலியோர்மீது தொடரப்பட்ட வழக்கு விசாரணை இன்று இலவசின் சிறையில் ஆரம்பமானது. நீதிபதிகள் மும்முரமான பந்தோபஸ்துடன் சிறைக்கு வந்தார்கள். சிறையைச் சுற்றிலும் துருப்புகள் காவல் புரிந்தன. வழக்கு ஆரம்பமானபோது முதல் எதிரி ஊசா லண்டனிலிருந்து தனது லாயர் பி. ஆர். லெர்டினஸ் வரும்வரை ஒரு வாரம் வழக்கை ஒத்திவைக்க வேண்டுமென்று மனுச்செய்திருந்ததன்பேரில் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

லண்டன் பாரிஸ்டர் லெர்டினஸ் இன்று லண்டனிலிருந்து ரங்கூனுக்கு விமானத்தில் புறப்பட்டுவருகிறார். (ராய்ட்டர்)

ஊழல்களை ஒழிக்க

மேற்கு வங்க சர்க்கார் கெடுபிடி

கல்கத்தா, அக். 8

மேற்கு வங்க சர்க்கார் தங்கள் நிர்வாகத்திலுள்ள ஊழல்களையும் லஞ்சப் பழக்க வழக்கங்களையும் ஒழித்துக்கட்ட மும்முரமான நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு இலாகாத் தலைவர்களும் நவம்பர் 15-ம் தேதிக்குள் இது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் அதேபோன்று ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 13ம் தேதி தோறும் அவ்வித அறிக்கை சமர்ப்பிக்கவேண்டுமென்றும் பிரதம காரியதரிசி சுற்றறிக்கை விடுத்திருக்கிறார். இந்த உத்தரவை மீறுகிறவர்கள் உடனே வேலையிலிருந்து விலக்கப்படுவார்கள். குற்றம் சாட்டப்படும் அதிகாரிகளுக்கு பென்ஷனும் ரத்துச் செய்யப்படும். (ராய்ட்டர்)

துருக்கியிலும் கிரீஸிலும் பூமி அதிர்ச்சி

ஏதென்ஸ், அக். 7

கிரீஸில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதால் உயிர்ச் சேதங்களும் பொருட் சேதங்களும் ஏற்பட்டன. ஏதென்ஸ் நகரிலிருந்து 142 மைல் தூரத்தில் அதிர்ச்சி ஏற்பட்டது. மேற்கு துருக்கியிலுள்ள ஸ்மிர்ணாவுக்கு அருகே பூமி அதிர்ச்சி ஏற்பட்டிருப்பதாக டச்சு தலைநகர் ஹேக்கிலுள்ள பூமி அதிர்ச்சிப் பதிவு யந்திரம் சுட்டிக் காட்டுகிறது. (ராய்ட்டர்)

பிரிட்டன்-தூரகிழக்குப் போக்குவரவு

லண்டன், அக். 7

அக்டோபர் 17ல் பி. அன்ட் ஓ கம்பெனி லண்டன்-தூரகிழக்குப் பிரயாணக் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்குமெனத் தெரிகிறது.

முதலாவது பிரயாணத்தில் 16 ஆயிரம் டன் நிறையுள்ள கப்பலான 'கண்டன்' செல்லும் என்று அறியப்படுகிறது. (ராய்ட்டர்)

இலங்கை சர்க்கார் லண்டன் பிரதிநிதிக்குக் காரியதரிசி

கொழும்பு, அக். 8

லண்டனில் உள்ள இலங்கை சர்க்கார் பிரதிநிதிக்குக் காரியதரிசியாக திரு. ஈ. வால்டர் ஜயவர்தனா நியமிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

ஏமாற்றித் திரியும் பேர்வழி

திரிகோணமலை, அக். 8

திரிகோணமலையில் ஓர் ஏமாற்றுப் பேர்வழி, தான் நேவியில் வேலை செய்வதாகக் கூறி அநேகருக்குக் கப்பலில் தணி வாங்கித் தருவதாகப் பணம் பறித்துத் திரிவதாக அறியப்படுகிறது.

பாலஸ்தீன சுதந்திரம்

10,000 அராபிய வாலிபர் யுத்தத்திற்குத் தயார்

"மூன்றாவது உலக யுத்தம் நேரிடும்"

கெய்ரோ, அக். 7

முஸ்லிம் சகோதரத்துவ சங்கத் தலைவர் ஷேக் எல்பஹகா அராபிய லீக் காரியதரிசி அசாம் பாஷாவுக்கு கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியிருக்கிறார்:-

பாலஸ்தீனத்தை பாதுகாக்க 10,000 அராபிய வாலிபர்கள் யுத்தத்திற்குத் தயாராக இருக்கிறார்கள். இது முதலாவது படையாகும். அராபியர் பிறப்புரிமைக்கு விரோதமாக பாலஸ்தீனத்தில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படின் ரத்தக்களரி ஏற்படுவதுடன் மூன்றாவது உலக யுத்தமும் நேரிடக் கூடும்.

சிரியாவின் புதிய மந்திரி சபை

டமஸ்கஸ், அக். 7

எதிர்க் கட்சிகளையும் சுயேச்சைவாதிகளையும் சேர்த்து ஜமில்பே சிரியாவில் புதிய மந்திரி சபை அமைத்திருக்கிறார். பழைய மந்திரி சபை ஒரு வாரத்திற்கு முன் ராஜினாமா செய்தது. ஜமில்பே, பிரதம மந்திரியும் அந்நிய நாட்டு மந்திரியுமாவர். வியாழக்கிழமை சிரியா பார்லிமெண்டு கூடும். பெய்ரூத்தில் நடைபெறும் அராபிய லீக்மகாநாட்டுக்கு நாளை பிரதம மந்திரி தலைமையில் சிரியாவின் பிரதிநிதி கோஷ்டி செல்லும். (ராய்ட்டர்)

ஜப்பானிய கடற்படை அதிகாரிக்குக் கொலைத் தீர்ப்பு

1500 பெயரின் உயிரை உறிஞ்சியவராம்

டோக்கியோ, அக். 7

ஜப்பானிய கடற்படை உதவித் தலைவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 1944ல் 1500 போர்னியோ ஜனங்களை மேற்படி ஜப்பானியர் எவ்வித விசாரணையும் இன்றி கொலை செய்ததன் காரணமாகவே மேற்படி தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது. (ராய்ட்டர்)

ஜப்பானியக் கள்ள மார்க்கெட்

டோக்கியோ, அக். 7

இங்கு கள்ளமார்க்கெட் வியாபாரத்தில் 345 கோஷ்டிகள் ஈடுபட்டிருப்பதாக அனுமானிக்கப்படுகிறது. அரசியல் கட்சிகள் இக்கோஷ்டிகள் மூலமே தாங்கள் அதிகமான வருவாயை அடைவதாகத் தெரிகிறது.

இவ்வர்த்தம் 50 ஆயிரம் கோடி யென் சம்பந்தப்பட்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கிறது. (ராய்ட்டர்)

இந்திய உணவுக் கொள்கை கமிட்டி

புதுடில்லி, அக். 8

இந்திய சர்க்கார் நியமித்த நிபுணர்களடங்கிய உணவுக் கொள்கைக் கமிட்டி செப்டம்பர் 30-ம் தேதியிலிருந்து தினந்தோறும் கூடி ஆலோசனை நடத்தி வருகிறது. இது சம்பந்தமாக மத்தியமாகாண பிரதமர் பம்பாய், சென்னை, கிழக்குப் பஞ்சாப், பீஹார் ஆகிய மாகாண உணவு மந்திரிகள் இவர்களது கருத்துகளைக் கமிட்டி தெரிந்துகொண்டது. மற்ற மாகாணப் பிரதம மந்திரிகள் உணவு மந்திரிகள் ஆகியோரது கருத்துக்களையும் தெரிந்து கொள்ளும். அடுத்த இரண்டு மாதங்களில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி கமிட்டி ஆலோசித்து வருகிறது.

கிராமக் குடிதண்ணீர் வசதிக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கிச் செலவிட சென்னை சர்க்கார் நிரந்தர நிதிக் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. (அ-பிரஸ)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

சோல்பரி திட்டத்தை இலங்கை மக்கள் ஏற்கவில்லை

தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தி விட்டன

யூ. என் பி. வெற்றி ஓர் பித்தலாட்டமே!

சாகிறவனுக்கு பிராணவாயுப் பிரயோகம் செய்வது போல இன்று மந்திரி சபை உயிருடனிருக்கிறது

மொரட்டுவை தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரான சோமவீர சந்திரசிரி அவர்களின் சிங்களப் பத்திரிகையான 'நிதாஸ' 8-10-47ல் எழுதிய ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு:

இரண்டாம் பேருக்குத் தெரியாமல், திரு. சேனநாயக்காவின் சிபார்சின் பேரில் சோல்பரி பிரபு ஒரு அரசியல் திட்டத்தை வகுத்தார். அவருடைய அரசியல் திட்டத்தின்படி நடந்த பொதுத் தேர்தலில் இலங்கை மக்கள் தமது தீர்பபை அளித்துவிட்டார்கள். அதாவது, அரசாங்கத்தைக் கைப்பற்ற திரு. சேனநாயக்கா நிறுவிய ஐ. தே. கட்சிக்குத் தனிப்பட்ட மெஜாரிட்டிப் பலம் பெற முடியாமல் தோல்வியடைந்ததானது, திரு. சேனநாயக்காவின் குடும்பக் கொள்கையையும், சோல்பரி பிரபுவின் அரசியல் தந்திரத்தையும் இலங்கை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றாகிறது.

மற்றக் கட்சியினரிலும் பார்க்க சேனநாயக்கா கட்சியினர் மெஜாரிட்டி பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் இக்கட்சி வெற்றியின் மர்மத்தை அறிந்தால் அது பெரிய வெட்கக் கேடாய் இருக்கும். ஐ. தே. கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர்களில் அநேகர் சொந்தச் செல்வாக்கினாலும், அதிகாரத் தோரணையினாலும், பஸ் முதலாளிகள்-கலாட்டாக்காரர் ஆகியோரின் ஒத்துழைப்பினாலும் தேர்தலில் வெற்றி பெறாதார்களேயொழிய, சோல்பரி அரசியலினாலும், ஐ தே கட்சியினாலும் சிறந்த கொள்கையினாலுமல்லவென்பது இரகசியமல்ல.

தமது குடும்பக் கொள்கைக்காதாரமாக முன் கூட்டியே வகுத்துள்ள திட்டப்படி திரு சேனநாயக்காவுக்கு மந்திரி சபை அமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமையில், தன் கட்சியில் சிறந்த மூளைகளும், சகல வகுப்பினரும் இல்லையென்பதை அறிந்த திரு. சேனநாயக்கா, சுயேச்சை வேஷம் தாங்கிய புல்லுருவிகளை சேர்த்துக்கொண்டு மந்திரி சபையை அமைத்துவிட்டார். இந்த முயற்சியானது, மரணத் தறுவாயில் இருக்கும் தனது ஐ. தே. கட்சிக்கும், தள்ளாடிக் கொண்டுவரும் தனது எதேச்சாதிகாரத்திற்கும் "ஆக்சிஜின்" கொடுப்பதைப் போன்றதேயொழிய, இன்னும் சில மாதங்களில் மூச்சடைத்துவிடும் என்பது நிச்சயம்.

இன்று கூடப்போகிற கபினெட் சபையைக் கூட்டு மந்திரி சபையென்று கூறப்படுகிறது அது தவறு. கபினெட் சபையை நிறுவ முன்வந்த சேனநாயக்கா கட்சியோடு வேறு ஏதாவது கட்சி சேர்ந்திருக்கிறதா? இல்லை. இருவாளர்கள் சுந்தரலிங்கம், சிற்றம்பலம் போன்றகரணக்காரர்களையும் மற்றும் சுயேச்சை புல்லுருவிகளையும் சேர்த்துக்கொண்டு கபினெட் சபையை பூரணமாக்கியிருக்கிறார். எனவே இந்தக் கரணக்காரப் பேர்வழிகள் ஐ தே கட்சியில் சேர்ந்திருக்கிறார்களென்றதான் சொல்லவேண்டும். அதாவது, ஐ தே. கட்சிக்கு உயிர் கொடுத்துதவ முன் வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தப் பேர்வழிகள் தேர்தல் பிரசாரம் செய்தபொழுதெல்லாம் யூ. என். பியையும், ஏகாதிபத்தியத்தையும் பட்டாதபாடுபடுத்தி எதிர்த்துப் பிரசாரம் பண்ணினார்கள் என்பதை அந்தத் தொகுதி வாக்காளர்கள் மறந்துபோகவில்லை இத்தகைய ஏமாற்றுதலினால் தான் இவர்கள் தேர்தலில் வெற்றி பெற்றார்களென்பது இரகசியமல்ல.

எனினும், இந்த கபினெட்குண்டு கூடிய சீக்கிரம் வெடித்துவிடும்! பதவிகளை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்துள்ள ஐக்கிய தேசியக்கட்சியினர் உள்ளிட்டு எதிர்க்கட்சியினர் உள்ளேயும் வெளியேயும் இரு புறமும் இடிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. இப்பொழுதே தமது தலைவர் மீது ஐ. தே. கட்சி பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் வெறுப்புக்கொண்டுவிட்டார்கள்; இம்மட்டுமல்ல துவேஷமும் வைராக்கியமும் கொண்டுவிட்டார்கள். தேர்தலில் தோல்வியடைந்த ஐ தே. கட்சி அபேட்சகர்கள் கூட கபினெட்டுக்கு எதிரான மனப்பான்மையை பொதுமக்களிடையே உண்டாக்கி வருகிறார்களாம். இப்படியாகத்தான் சேனநாயக்கா கபினெட் சபைக்கு நாற்புறமும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்யும் என்பது அவர்களுக்கும் தெரியும்.

வெற்றி அல்லது தோல்வி. எப்படியாயினும், இந்தப் பணக்காரக் குடும்ப அரசாங்கத்தை இடது சாரிகளுட்பட எதிர்க்கட்சியினர் ஒருகை பார்க்கவே முயற்சிப்பார்கள். ஏமாற்றப்பட்ட ஐ. தே. கட்சி அங்கத்தவர்கள் கூட அவர்களுடன் ஒத்துழைப்பார்களென்று இப்பொழுதே தெரிந்துவிட்டது. எனினும் இவர்களிடையே ஒரு கட்டுப்பாடு இல்லாதது ஒரு குறைவுதானெனினும், அதெல்லாம் சீர்திருந்திவிடும் என்று எதிர்பார்ப்போம்.

புதிய அரசியல் திட்டத்தையும் சேனநாயக்கா அரசாங்கத்தையும் ஒழித்துக்கட்ட எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பொதுமக்கள் எதிர்பார்த்தபடி, இம்மாதம் 14-ம் தேதி கூடப்போகும் பார்லிமெண்ட் முதல் கூட்டத்தில் எதிர்க் கட்சியினர், சேனநாயக்கா மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாக அறியப்படுகிறது. இத் தீர்மானத்தின் கதி யென்னவாகுமென்று இப்போது சொல்ல முடியாதெனினும், இந்த சேனநாயக்கா அரசாங்கம் செய்யும் சதியான நடவடிக்கைகளையெல்லாம் அம்பலத்திற்கு கொண்டுவருவார்களென்பது மட்டும் எல்லோருக்கும் தெரியும்.

சீரான நல்லொழுக்கமும் சுயபாஷைகளில் தேர்ச்சியும், எதிர்பிரதிவாதங்களிடையே நடுநிலைமையும், சட்ட ஞானத்தோடு பேச்சுத் திறமையும், ஒரு தேசத்தின் பார்லிமெண்ட் தலைவர் பதவி வகிப்பவருக்கு இருக்க வேண்டுமென்று நாகரீக முள்ள தேச மக்கள் விரும்புகிறார்கள். இவ்வித தகுதிகள் பார்லிமெண்ட் தலைவருக்கு இருப்பது அத்தேசத்திற்கு பெரியவோர் கீர்த்தியும் கூட. ஆனால் நம் நாட்டிலே சேனநாயக்கா கட்சியினர் தலைவர் பதவிக்கு நிறுத்தியிருக்கும் அபேட்சகரைப்பற்றி பொது மக்கள் ஆச்சரியப்படமாட்டார்கள் அவர் முதலாவது அரசாங்க சபையில் தலைவராய் இருந்தபோது, ஸ்ரீமதி அசரப்பாவுடன் தகாத முறையில் நடந்துகொண்டதற்கும், சகோதரரொருவரின் சொத்துப் பிரிவினை வழக்கில் கோர்ட்டாரை அவமதித்த குற்றத்திற்காகவும் இரு முறை தண்டிக்கப் பட்டவர். இவர் தான் திரு. மொலமுரே என்று இலங்கையில் எவருக்கும் அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. இம் மாதக் கடைசியில் யார் தலைவர் என்று நிச்சயமாகவே அறிந்துவிடலாம்.

கொள்ளைக் கோஷ்டிக்கும் போலிஸ் கோஷ்டிக்கும் துப்பாக்கிச் சண்டை

வழிப்போக்கர் சுடப்பட்டார்

கொழும்பு, அக். 8

ரயில் கொள்ளைகள் பலவற்றைத் துணிகரமாக நடத்தித் தலைமறைவாக திரிவதாகக் கருதப்படும் கொட்டாவை காரா என்னும் கொள்ளைக்காரனைப் பிடிக்கச் சென்ற போலிஸ் கோஷ்டிக்கும், காராவின் கோஷ்டியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

இச்சண்டை நடந்துகொண்டிருக்கும்போது தேமிஸ் அப்புஹாமி என்னும் வழிப்போக்கர் இடையில் சிக்கிப் படுகாயம் அடைந்ததன் காரணமாக கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

புதுக்கடை முகைதீன் மசூதி

நிதி திரட்டத் தீர்மானம்

கொழும்பு, அக். 8

புதுக்கடை வின்சன் வீதி மசூதி நிர்வாகக் கமிட்டியின் அவசரக் கூட்டம் ஒன்று அக்டோபர் 5-ம் தேதி மசூதிக் கட்டிடத்திலேயே நடைபெற்றது. மசூதி தர்மகர்த்தாவான அல்ஹாஜி. எஸ் பி. எம். இப்ராம்சா தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் மசூதிக் கருகாமையில் உள்ள நிலத்தையும் கட்டிடத்தையும் வாங்கும் நோக்கமாக ஒரு நிதி திரட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

கீழ்க்கண்டவர்களின் நன்கொடைகளும் நன்றி அறிதலுடன் இக்கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. (1) அல்ஹாஜி எஸ். பி. எம். இப்ராம்சா, 1000 ரூபா, (2) எஸ். பி. எம் ஹுஸேய்ன், 500 ரூபா, (3) மு. மு. ஹனிபா, 500 ரூபா, (4) அம்சு நாகர், 500 ரூபா, (5) எஸ் நாகூர் பிச்சை, 50 ரூபா, (6) ஸி. எஸ். ஹமீத், 250 ரூபா.

தனிதிகாரி ஸி. எஸ். ஹமீது ராஜினாமாச் செய்ததன் காரணமாக அந்த ஸ்தானத்திற்கு அல்ஹாஜி எம். எம். அப்துல் காதர் நியமிக்கப்பட்டார்.

பாதுகாப்பு கவுன்ஸிலில் இந்தோனேஷியா அறிக்கை

நியூயார்க், அக். 8

யுத்தத்திற்குப் பின்னிருந்த இடத்திற்கு இருதரப்புத் துருப்புகளும் திரும்பிவிட உத்தரவிடப்பட வேண்டுமென்று இன்று பாதுகாப்பு கவுன்ஸிலில் ஸ்தானிகர் கமிட்டியின் இந்தோனேஷிய அறிக்கை மீது விவாதம் நடைபெற்றபோது இந்தியாப் பிரதிநிதி டாக்டர் பி. பி. பிள்ளை தெரிவித்தார்.

விவாதம் வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. அதற்குள் பட்டேவியாவிலிருந்து ஸ்தானிகர் கமிட்டியின் இறுதியான அறிக்கை வந்துவிடும். (ராய்ட்டர்)

சர்ச்சிலுக்கு பர்மா மந்திரி சூடு

பர்மிய தூதுக் கோஷ்டிக்கு பிரிட்டிஷ் பிரதமர் விருந்து

ரங்கூன், அக். 7

சர்ச்சில் கன்சர்வேடிவ் மகாநாட்டில் பேசியதைக் கண்டித்து பர்மா அந்நியநாட்டுமந்திரி இன்று சர்ச்சிலுக்கு சரியான சூடு கொடுத்தார். பர்மாவைப் பற்றி சர்ச்சில் அக்கரைப்படத் தேவையில்லையென்றும் துவேஷமும் திமிருங்கொண்டு சர்ச்சில் உளறுவது நியாயமில்லையென்றும் தெரிவித்தார்.

பர்மா பொருளாதார தூதுக் கோஷ்டியாருக்கு இன்றுலண்டனில்பிரிட்டிஷ்பிரதமர் ஒருவிருந்தளித்தார். (ராய்ட்டர்)

20,451 ரூபாயை மோசம் செய்தாரா?

ஸ்டோர் மானேஜர் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, அக். 8

பாலத்துறையில் உள்ள ஒரு பாக்கு ஸடோர் மானேஜரான ஜயக்கொடி 20,451 ரூபாயை நம்பிக்கை மோசம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். எதிரி தான் குற்றவாளியென்பதை ஒப்புக்கொண்டார்.

அக்டோபர் 8 ல் ஜயக்கொடி ஒரு களவு நடந்தது போன்ற சூழ் நிலைகளை உண்டாக்கிப் பணத்தைக் கள்வன் கொண்டு போனதுபோல் நடித்ததாகக் கூறப்பட்டது.

எதிரிக்கு ஒரு மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தாலிய குடியேற்ற நாடுகள்

ஈராக் சர்க்கார் கோரிக்கை

லண்டன், அக். 8

4 வல்லரசுகள் அந்நிய நாட்டு உதவி மந்திரி மகாநாடு நடைபெறுகிறது. இந்தியா, பாகிஸ்தான் உட்பட 19 நாடுகள் இதில் தங்கள் அபிப்பிராயத்தை தெரிவிக்க உரிமையுண்டு. இம்மகா நாட்டில் இத்தாலியின் மாஜி குடியேற்ற நாடுகளின் எதிர்கால நிலைமைபற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது. அராபியர்கள் வசிக்கும் மாஜி இத்தாலிய குடியேற்ற நாடுகளின் லிபியா, டிரிப்போரிட்டானியா ஆகிய இரு நாடுகளையும் தன் சுதந்திர அராபிய நாடுகளாக்க வேண்டுமென்று ஈராக் சர்க்கார் ஒரு மகஜரை சமர்ப்பித்திருக்கிறார். (ராய்ட்டர்)

உணவு கவுன்ஸிலில் பிரேசில் மீண்டும் சேர்ந்தது

லண்டன், அக். 7

சர்வதேச அவசர உணவு கவுன்ஸிலில் பிரேசில் மீண்டும் சேர்ந்தது. தனது அரிசி இருப்பைப் பங்கிடு விற்க அது ஏற்பாடு செய்யும். ஜூனில் அது கவுன்ஸிலிலிருந்து விலகியபின் மூட்டை 123 ராத்தல் எடையுள்ள 30 லட்சம் மூட்டைகள் திவங்கிக் கிடக்கின்றன. (ராய்ட்டர்)

லாக்கப்பிலிருந்து தப்பியோடிய கைதி

5 வருஷத்திற்குப் பின் அகப்பட்டான்

கொலை செய்ததாகக் குற்றச்சாட்டு

களுத்துறை, அக். 8

மத்துகமை போலிஸ் லாக்கப்பிலிருந்து 1942 ல் பாய்ந்து போன விக்கிரம உங்குவா என்னும் அரனேலியா மினிப் பேயில் கைது செய்யப்பட்டு மத்துகமைக் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டான். எதிரி விளக்கமறியலில் வைக்கப்பட்டான்.

பிரஸதாப பேர்வழி சிலகரத்ன என்னும் போலிஸ் கான்ஸடபிளைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவனாவான்.

குணசிங்காவின் தொழிற் சங்கத் தலைமைக்கு ஆபத்து

வர்த்தகக் குமாஸதாக்கள் அவரை வெளியேற்றலாம்

கொழும்பு, அக். 8

இலங்கை வர்த்தகக் குமாஸதாக்கள், சங்கம் வங்கிக் குமாஸதாக்கள் சங்கம் ஆகியவற்றை ஒன்றாக இணைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன. இங்ஙனம் இணைக்கப்பட்ட சங்கத்திற்கு ஒரு குமாஸதாவே தலைவராக நியமிக்கப்படலாம்.

வர்த்தகக் குமாஸதாக்கள் சங்கத்தைச் சேர்ந்த பலர் திரு. குணசிங்கா அரசாங்கத்தில் ஓர் காரியதரிசிப் பதவியை ஏற்றுக் கொண்டுவிட்டதால், அவர் இனிமேலும் சங்கத் தலைவராக இருக்கக்கூடாது என அபிப்பிராயப்படுகின்றனர். "ஏனெனில் சங்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் விசுவாசமாய் நடப்பது ஒருவரால் முடியாது" என்று அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இக்காரணத்தால் இன்று நடக்கும் கமிட்டிக் கூட்டத்தில் குணசிங்கா சங்கத்தில் தலைமை வகிக்கும்பதவியை விட்டுநீக்கப்படவேண்டுமென்று ஓர் தீர்மானம் கொண்டுவரப்படும் என்று தெரிகிறது.

கட்டிட வேலைக்கு
வேண்டிய எல்லா
விதமான சாமான்களும்
குறைந்த விலையில்
கிடைக்கும் இடம்
செட்டிநாட்
கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

கதம்பைக் கயிறு
கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும்
தும்பால் செய்யப்பட்ட சாமான்களும்
நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்
ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த
நேரத்தில் செய்து கொடுக்கப்படும்
மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை
வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு
விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.
A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota.
No 44, Wolfendahl Street,
Colombo.
ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச கமியூனிஸ்ட் ஸ்தாபனம்

அமெரிக்கா தாக்குகிறது

இரு யூகோஸ்தானிக அதிகாரிகளை சில்லி வெளியேற்றியது

வாஷிங்டன், அக் 8

போலந்தில் 9 நாடுகள் மகாநாடு கூடி பெல்கிரேடில் அமைத்துள்ள சர்வதேச கமியூனிஸ்ட் பிரசார ஸ்தாபனத்தை அமெரிக்க சர்க்கார் பலமாகத் தாக்குகிறார்கள். ஐரோப்பிய பொருளாதார நீட்சியை சீர்குலைக்க ஏற்பட்டிருக்கும் அவேஷமானதும் அசம்பாவிதமானதுமான ஸ்தாபனம் என்று அதைக் கண்டிக்கின்றனர்.

இத்தாலிய குடியேற்ற நாடுகள்

லண்டன், அக். 8

நான்கு வல்லரசுகளின் உதவி அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடு இத்தாலிய குடியேற்ற நாடுகளின் நிலைமையை அறிய ஒரு கமிஷன் அனுப்ப வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். இது சம்பந்தமாக ரஷியா தயாரித்த நகலுக்கும் பிரிட்டன் தயாரித்த நகலுக்குமுள்ள சிறு வித்தியாசங்களை சரிக்கட்ட ஒரு சப் கமிட்டி நியமிக்கப்பட்டது. இக்கமிட்டி வெளிக்கிழமை தனது அறிக்கையை மகாநாட்டில் சமர்ப்பிக்கும்.

யூகோ நடவடிக்கை

பெல்கிரேட், அக் 8

யூகோ சர்க்காருக்கு விரோதமாக பிரிட்டிஷ் ஒற்றர்களுக்குடந்தையாக இருந்து சதி செய்ததாக செர்பிய பாமரர் கட்சித்தலைவர் யோவனோவிச்சுக்கு 9 வருட தண்டனையும் 3 வருடம் பிரஜா உரிமை பறிமுதலும் விதிக்கப்பட்டது. கிரோட் பாமரர் கட்சித் தலைவர் காஜிக்கு 5 வருட தண்டனையும் 2 வருடம் பிரஜா உரிமை பறிமுதலும் விதிக்கப்பட்டது.

யூகோ ஸ்தானிக அதிகாரிகள் பிரஷ்டம்

சான்டியாகோ, அக் 8

தென் அமெரிக்காவிலுள்ள சில்லி நாட்டிலிருக்கும் யூகோஸ்லவிய ஸ்தானிகத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் தென் சில்லி நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை நிறுத்தம் நடத்த முயற்சிக்கும் ஸ்தாபனத்தில் ஈடுபட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டி அவர்களை சில்லி சர்க்கார் நாட்டைவிட்டுவெளியேறும்படி உத்தரவிட்டார்கள் அவர்கள் போலிஸ் பந்தோபஸ்துடன் ஆர்ஜன்டைனா நாட்டுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

பாக்கிஸ்தானுக்கு ட்ரூமன் ஆதரவு

நியூயார்க், அக் 8

உலகுக்கும் இரு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் விஷயங்களில் பாக்கிஸ்தானுக்கு அமெரிக்கா உதவி புரியுமென்று இன்று தன்னிடம் அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க வந்த பாக்கிஸ்தான் ஸ்தானிகர் இஸ்பஹானியிடம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் தெரிவித்தார். [ராய்ட்டர்]

பரிசுத்த பாப்பரசர் நண்பர் படுகொலை

ரோம், அக். 8

பரிசுத்த பாப்பரசரின் அத்தியந்த நண்பரான குருடான பிளாஸிடோ லுகானோ நேற்றிரவு தனது அறையில் தடியால் தாக்கப்பட்ட காயங்களுடன் குரல்வளை நெரிக்கப்பட்டு இறந்து கிடந்தார். அவர் இருந்த குருமடத்தருகே நடைபெற்ற அரசியல் பொதுக் கூட்டத்தில் காவல் செய்துகொண்டிருந்த போலிஸார் அழைக்கப்பட்டனர். யாரோ இருவர் குருமடத்திற்கு வந்து முஸோலினிக்காக ஆண்டவனை நோக்கி பிரார்த்தனைசெய்யும்படி குரு லுகானோவைக் கேட்டதாகவும் அவர் மறுக்கவே அவர்கள் அவரைக் கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

'அக்டோபர் 25 சோதனை நாள்'

கால்பேஸ் திடலில் என். எம். பெரேரா பேச்சு

கொழும்பு, அக். 9

"யூ என். பி. மந்திரி சபை அமைக்கப்பட்டு விட்டபோதிலும் சோதனைக்காலம் இனித்தான் இருக்கிறது. அக்டோபர் 25-ம் தேதி எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்று திரண்டு இம் மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டு வருவார்கள். அப்போதுதான் அச்சோதனை ஏற்படும்"

நேற்று மாலை கால்பேஸ் திடலில் நடந்த சமசமாஜக் கட்சிக் கூட்டத்தில் பேசிய திரு. என். எம் பெரேரா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு பெரேரா மேலும் பேசுகையில் தமது கட்சியைச் சேர்ந்த பார்லிமெண்டு அங்கத்தினர் பார்லிமெண்டு சபையைத் தமது கொள்கைகளை விளக்கும் ஒரு மேடையாகவும் அந்நியை எதிர்த்துப் போராடும் ஒரு கருவியாகவுமே உபயோகிப்பார்கள் என்று கூறினார்.

அரசாங்கக் குமாஸதாக்களை குறித்து திரு பெரேரா பேசியதாவது:- "நாம் தொழிற் சங்க அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தர உள்ளே போராடுவோம். ஆனால் அதே சமயம் குமாஸதாக்கள் இலாக்காக்கள் தோறும் தமது கமிட்டிகளை அமைத்து தம்மை ஸ்தாபன ரீதியில் பலப்படுத்த வேண்டும். அப்போது உள்ளே நடக்கும் போரை வெளியில் நடக்கும் போர் அதிக வலுவுடையதாக்கும்."

எதிர்க்கட்சித் தலைமைபற்றி ஒரு சரியான முடிவுக்கு வரா மற்போவதற்கு போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியே காரணம் என அவர் கூறினார். எதிர்ப்பின் தலைமை அதிகப்படியான அங்கத்தவம் கொண்ட தமது கட்சிக்கே இருக்கிறதென்றும் எல்லா சக்திகளையும் ஒன்று சேர்த்து யூ. என். பிக்குச் சமாப்தி செய்ய தாம் முயல்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் சமசமாஜக் கட்சியின் இதர பார்லிமெண்டு அங்கத்தினரும், சமீபத்தில் சிறையிலிருந்து விடுதலையான திரு. வீரசேனவும் பேசினார்கள். பார்லிமெண்டு ஜனப்பிரதிநிதிகள் சபையின் ஒரே பெண் அங்கத்தினரான திருமதி புளோரன்ஸ சேனநாயக்காவும் பேசினார்.

ஹரிஜனங்களுக்கு ஆலயங்கள் திறக்கப்பட வேண்டும்

வாலிபர் காங்கிரஸ தீர்மானம்

கொழும்பு, அக். 8

அகில-இலங்கை வாலிபர் காங்கிரஸின் காரியக்கமிட்டிக் கூட்டம் திரு. பி. என். குமாரசுவாமி தலைமையின் கீழ் நடைபெற்றது.

கீழ்க்கண்டதீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன:

(அ) இத்தீவிலுள்ள எல்லா ஆலயங்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்படல்வேண்டும்.

(ஆ) அகில இலங்கை வாலிபர் காங்கிரஸிற்கு ஆரஞ்சு, பச்சை, வெள்ளையாகிய மூவர்ணங்களைக் கொண்டு ஆக்கப்பட்ட ஒரு கொடி தேவை. அக்கொடியில் இலங்கையின் படம் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(இ) பின்வரும் விஷயங்கள் சம்பந்தமாக வாலிபர் காங்கிரஸ் உழைக்கும்.

[1] அஹிம்ஸா முறையில் இலங்கையின் சுதந்திரத்திற்காக உழைப்பது. [2] உள்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்திக்காகஉழைப்பது. [3] தொண்டர் படையொன்று நிறுவுவது. [4] மதுபானம் அருந்துவதை நிறுத்துவது. [5] கைத்தொழில்களைத் தேசிய மயமாக்குவது. [6] இலங்கையிலுள்ள வெவ்வேறு சமூகங்களுக்கிடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்துவது. [7] தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் தொழில் யூனியன் உரிமை பெறச்செய்வது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

வகுப்பு வெறியும் யூ. என். பி. கட்சியும்!

ஐயா,

திரு. சேனநாயக்கா பிரதமமந்திரிப் பதவி ஏற்றவுடன் ஓர் பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் பால்மணம் மாறாத குழந்தைபோலவும், வகுப்பு வாதமென்றால், அது என்ன சாமான் என்று ஆச்சரியப் படுபவன்போல் நடித்த சேனநாயக்கா தமிழ் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஓர் வகுப்புவாதக் கட்சியென்று கூறியுள்ளார். என்ன அநியாயம்! வடமாகாணத்து மக்கள் எல்லோரும் ஏகோபித்து ஒற்றுமையாக இருக்கவேண்டுமானால், தென் மாகாணத்து மக்களை எதிர்ப்பது என்பதா "திரு. சேனநாயக்காவின் மூடக்கொள்கை. சிங்களவரே! ஒன்று சேருங்கள்; என்று கதறும் சேனநாயக்கா தேசியத்தைப் பற்றி நினைப்பதே கொடிய பாவம். வகுப்பு வெறிபிடித்த சேனநாயக்காவும், வகுப்பு வெறி தலைவிரித்தாடும் யூ. என். பி. கட்சியினர் உள்ள வரையிலும் ஏழை மக்களாகிய இலங்கையர்கள் ஒருவித நன்மையும் பெறப்போவதில்லை.

மேலும், சேனநாயக்கா அரசாங்கம் அமைத்த விதத்தில், சிறு பான்மைக் கட்சியினர்களிடையே அவருக்குள்ள அன்பும் அமோகமான ஆதரவும் தெரிகிறது. முதலாளிகளின் தோழன்; சொந்தக்காரரின் தோழன்! சேனநாயக்கா அவர்களுக்கேயன்றி, பசி, பட்டினி, பிணி முதலிய கஷ்டங்களால் வருந்தும் ஏழைகளுக்கும் பொது ஜன நன்மைக்கும் ஒரு உதவியும் செய்யமாட்டார். மேலும், இலங்கை மக்கள் அந்நியரின் ஏகாதிபத்தியத்தைத் தொலைக்கவேண்டுமென்கிறார்கள். இது எப்படி முடியும்? இதற்குமுதலாவதாக, வகுப்புவெறியின்றி, நாமெல்லோரும் ஓர் குலம், நாமெல்லோரும் ஓர் இனம், நாம் எல்லோரும் இலங்கை மக்கள் என்ற முற்போக்குடைய எண்ணங்களுடன் சேனநாயக்கா கொஷ்டியாரைத் தயவு தாட்சண்யமின்றி தொலைத்தொழிக்க வேண்டும். அதன் பின்பு அந்நியரின் ஏகாதிபத்தியத்தைத் தொலைப்பதற்கு அதிக காலமாகாது.

மேற்கூறியபடி இலங்கை மக்களின் சுதந்திரம் அவர்கள் கையிலேயே இருக்கின்றதென்பதைச் சொல்லளவிலின்றிசெயலளவிலும் காட்டவேண்டுமானால், வகுப்பு வெறிபிடித்த அதாவது வகுப்புவாதம் என்னும் பேய்பிடித்த யூ. என். பி. கட்சியினரும் மற்றும் தேசிய முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவுள்ள வேறு சில கட்சிகளும் நின்ற இடம் தெரியாமல் அழிய வேண்டும். ஆகையால் யூ என். பி. கட்சி தொலைவது அந்நியரின் ஏகாதிபத்தியம் தொலைவதற்கும், தேச விடுதலைக்கும் தேசிய முன்னேற்றத்திற்கும் நன்மை என்பது மலை விளக்காகும்.

என். சிவக்கொழுந்து
ஹாட்லிக் கல்லூரி.
பருத்தித்துறை, 3-10-47.

வவனியாப் பிரதிநிதி

ஐயா,

தற்போதைய பாராளுமன்ற சபைக்குத் தமிழ் மக்கள் சார்பாகச் சுயேச்சையாய் நின்று வெற்றி பெற்ற இரு அங்கத்தவர்கள் உள்ளார்களே! இவர்கள் தெரிவு செய்யப்படுமுன் ஏழை மக்களை ஏமாற்றி அளவில்லாத சத்தியங்கள் செய்து சபைக்கு வந்தார்கள். ஆனால் அதல் வவனியாப் பிரதிநிதியாய்த் தோற்றியுள்ளவரை அவ்வூர் மக்கள் அவரினதும், அவர் மனைவியினதும் சத்தியத்திற்கும் தாம்பூல சந்தோஷத்திற்குமாய்த் தெரிவு செய்துள்ளார்கள் என்பது உண்மைதான் ஆனால்!

அவர்கள் அவ்விதம் அறியாமையால் தெரிவு செய்ததையிட்டுத்தற்போது தான் கவலை கொள்கின்றார்கள். ஆசை காட்டி மோசம் செய்த பாவியா? அன்றேல் நேசம் காட்டி வினையம் செய்த பாவியா? அன்றேல் மனம் ஒத்த நட்புக்கு வஞ்சகம் செய்த பாவியா? உண்மையில் இது மூன்றையும் கடந்து செய்தவரேயாவர்.

ஐயா! மகிடி கேட்டு மயங்கியாடும் அரவம்போன்று வெயிலிலும் மழையிலும், சாமத்திலும் ஏமத்திலும் எங்கள் வீட்டுப் படலைகளைத்திறந்து வெற்றிலை பாக்குடன் தேநீர் விருந்தாளியாய் வந்து சத்தியம் செய்து போனவர் இப்படி நடப்பார் என்றும் எங்களை ஏமாற்றுவார் என்றும் நாங்கள் நம்பி இருக்கவில்லை. என்றும் அநியாயமாய் எங்கள் அபிமானத்தையும் எங்கள் அபிமானத்திற்காய்ப் போராடும் அங்கத்தினர்களையும் இந்த ஆசாடபூதியின் வலையில் சிக்கி நாசமாக்கிவிட்டோம் என்றும் கவலையடைகின்றார்கள்.

ஏன் ஐயா! இந்த வேலை. தமிழ் மக்களால் தெரியப்பட்ட மகான் அவர்கட்காக அவர்களின் உரிமைக்காகப் பாடுபட வேண்டாமா. யாழ் நகர் மக்களின் சார்பாக உள்ள மற்றும் அபேட்சகரோடு நின்று ஒன்று கூடிப் போராடக்கூடாதா. தற்போது தூபம் போட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டது உண்மை. அன்றியும் யூ. என். பி. யின் தூண்ட இறுகப்பிடித்து மந்திரிப் பதவியைப் பெற்றதும உண்மையானால் இந்தப் பதவி இம்முறைக்குமட்டுமா? அந்தோ மறு முறையும் நிலைநிற்குமா?

பட்டம் பதவி மோகத்தாலும் பண வாஞ்சையாலும், தான் கற்ற கல்வியையும் மக்களால் பெற்ற மகிமையையும் திரை மூடி மறைக்க முற்பட்டுள்ளாரே! இவருக்குப் புத்தி புகட்ட யாருமில்லையா? அன்றேல் அவரை ஆதரித்த மக்கள்தான் புகட்டவேண்டுமா?

இம்முறை ஏமாற்றியது போல் மறு முறையும் வீடு வீடாய்க் காடுகரம்பைகளைக் கடந்து கன்னியும் தானும் காட்சி கொடுக்க விரும்புவாரா- இம்முறைபோல் மறுமுறையும் தாம்பூல வர்க்கம் சகாயமாய்க் கிடைக்கக் கடவுள் அருள் புரிவாரா! அன்றேல் யூ. என். பி ஆட்கள் துணை புரிவார்களா?

இவற்றைத் திறம்படச் சிந்தித்து மூட்டையைக் கட்டிக் கொள்ளட்டும். மூன்று முறை கேட்டு நாலாம் முறையும் நாய் படாப்பாடுபட்டு வென்றாரே ஏதோதானும் சொற்பசரக்கைப் பார்லிமெண்டில் பறிக்கப் போறதாய்ச் சொல்லி வந்தாரே; இதுதான் கடைசியும் முதலுமாய் இருந்து பறிக்கட்டும்பார்க்கலாம். ஆனால் அவ்வூர் மக்கட்கு ஆறுதல் அளிக்கட்டும்.

இங்ஙனம்,
வவனியா அன்பன்,
ச. பி. சேலியர்.

212, காஸ் வொர்க்ஸ் ஸ்டிரீட்,
கொழும்பு.

தமிழ் ஒலிபரப்பு

ஐயா,

சென்ற சில நாட்களாக கொழும்பு ரேடியோ நிலையத்தில் ஒலிப்பரப்பப்படும் தமிழ் இசைத் தட்டு சங்கீதம் பெரிய ஏமாற்றத்தை அளித்து வருகின்றது.

"இசைத் தட்டு நிகழ்ச்சி"க்காக ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிஷங்களேயானாலும் அதைத்தானும் சீரிய முறையில் ஒலிபரப்பாளர் பயன் படுத்துகின்றார் என்று சொல்லுவதற்கில்லை.

பழுதடைந்த இசைத் தட்டுக்களை உபயோகிப்பதும், இடையே நிறுத்தி அதன் சாக்காக ஓர் குட்டிப்பிரசங்கம் செய்வதும் ஓர் "நிகழ்ச்சி"யாகவருகின்றது. ஒலிபரப்பாளர் "அறிவிப்புகளை" வினோதமாகக் கையாளுகின்றார். உதாரணமாக"..... பாடிய இசைத்தட்டுகள் விளையாடப்படும்" என்று அறிவிப்பது பலருக்கு விரஸமாகப் படுகின்றது. ஹாஸ்யமாகவுமிருக்கின்றது.

ரேடியோ கான ரசிகர்களுடைய பொறுமையும் சோதிக்கப்படமாட்டாது. ஒலிபரப்பு இலாகாவும் நல்ல புகழைச் சம்பாதித்துவிடும்.

"கான ரஸிகன்"

திரிகோணமலை,
7-10-47.

நகர சபையின் போக்குக்கு கண்டனம்

மாத்தறையில் பொதுக் கூட்டம்

மாத்தறை அக். 9

மாத்தறையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசும்போது டாக்டர் எஸ். ஏ. விக்கிரம சிங்கா மாத்தறை நகரசபை வீதியில் பொருட்களை விற்பவர்கள் மீதுவழக்குத் தொடரத் தீர்மானித்திருப்பதை அதிக வன்மையாகக் கண்டித்தார். நகரசபை திருந்தி நடந்துகொள்ள வேண்டும் என்றும் இல்லாவிட்டால் கமியூனிஸ்ட் கட்சியின் மாத்தறைக் கிளை அடுத்த தேர்தலில் நகரசபையிலுள்ள வீரும்பத்தகாத பேர்வழிகளை ஒழித்துக் கட்டிவிடும் என்றும் அவரால் எச்சரிக்கப்பட்டது.

நகரசபையின் தப்பான போக்கைத் தடைசெய்யும் இயக்கத்தின் முதலாவது கூட்டமே இது என்றும் அவர் கூறினார்.

மாத்தறைப் பகுதி பார்லிமெண்ட் அங்கத்தினரான ஹரி அபயகுணவர்த்தனவும் பிரஸ்தாப கூட்டத்தில் சமுகமளித்திருந்தார். அவர் நகரசபை காய்கறி, மீன் விற்பனையாளர்களைத் தடைசெய்யத் தீர்மானித்திருப்பதை அமுல்நடத்தினால் இருபது வருடங்களுக்கதிகமாக இங்ஙனம் ஜீவித்து வந்த பல நூற்றுக்கணக்கானவர்கள் வேலையை இழந்து தவிப்பார்கள் என்று கூறினார்.

பொதுமலகூடங்களை அகற்றத் தீர்மானித்ததற்கும் இக்கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. ஹக்மனப் பகுதிப் பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. பிரேமலால் குமாரசிரி பிரஸ்தாபக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

முனிசிப்பல்சபைக் கூட்டம்

கொழும்பு, அக். 9

நேற்று நடைபெற்ற முனிசிப்பல்சபைக்கூட்டத்தில் ஸ்தல ஸ்தாபன சேவைச் சட்டம் ரத்தாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம், ஸ்தல ஸ்தாபனக்கமிஷனே அவசியமில்லாததென வற்புறுத்திக் கூறியது.

பிரஸ்தாப தீர்மானத்தை டொரிங்டி சூசா பிரேரிக்க, அபூபக்கர் ஆதரித்தார்.

கூட்டத்தில பொருளாதாரக் கமிட்டியின் ஆலோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டபோது அவை ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவ் ஆலோசனைகள் பிரகாரம் முனிசிப்பாலிட்டியின் இனச் சமபல, கீழ்தர ஊழியர்களுக்கு அரசாங்க விகித யுத்த அலவன்ஸ வழங்கப்படும்.

"பசு பலியை நிறுத்துக"

அலிகார் முஸ்லிம்கள் வேண்டுகோள்

அலிகார், அக். 6

பக்ரீத் தினத்தன்று பசுக்களை பலியிடக் கூடாதென்று அலிகார் சர்வகலாசாலையைச் சேர்ந்தவர்களும், ஸ்தல கால் நடை வியாபாரிகளும் முஸ்லிம்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குடித்திருப்போருக்கு அபராதம் அல்லது சிறை

சென்னை சர்க்கார் திருத்த மசோதா

சென்னை, அக். 7

மதுவிலக்குப் பிரதேசங்களில் குடி போதையில் காணப்படுவோருக்கு ரூ 1000 வரை அபராதம் அல்லது 6 மாதம் சிறைத் தண்டனை விதிக்க அதிகாரம் அளிக்கும் திருத்த மசோதா வைமதுவிலக்குச்சட்டத்துக்குக் கொண்டு வருவதென மந்திரி சபை இன்று முடிவு செய்தது.

புதிய சட்டப் பேராசிரியர்

கொழும்பு, அக். 8

சர்வகலாசாலை சட்டப்பேராசிரியராக நியமனம் செய்யப்பட்ட நீதிபதி சூட்ஸ தமது பேராசிரியர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 3-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரூஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி

புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்களிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

காந்தி ஜெயந்தி கொண்டாட்டங்கள்

பொகவந்தலாவ

காந்தி ஜெயந்தி விழாவை பொகவந்தலாவ வாசிகள் மிகவும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். அன்றைய தினத்தில் சகல கடைகளும் ஜாதிமத வேற்றுமையின்றி அடைக்கப்பட்டிருந்தன அன்று காலையில் கதிரேசன் கோவிலில் அபிஷேகமும் காலையில் மகாத்மா காந்தியின் திரு உருவப் படத்தைக் காரில் வைத்து மிகவும் அலங்காரமாக ஜோடித்து ஷெ கோவிலிலிருந்து மேளம் கரகம் பியாண்டு வாத்தியங்களுடன் ஊர்வலமாக பெரியரத் தோட்டம் பஜார் வரை உற்சாகமாக எடுத்துச் சென்று கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டது.

சர்க்கா சங்கம்

நாவல, அக். 9

சென்ற சனிக்கிழமை நாவல சர்க்கா சங்க ஆதரவில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு முகாந்திரம் ஆர்தர் டி. எஸ் ஜயசிங்க தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பார்லிமெண்ட் அங்கத்தினர் திரு. கே கனகரத்னம் இக் கூட்டத்தில் பேசுகையில் காந்திஜி சர்க்கா மூலமே இந்திய சுதந்திரத்தைச் சம்பாதித்ததாகத் தெரிவித துசர்க்காவில் அதிகரித்த அக்கறை காட்டுமாறு வேண்டினார்.

ஹேமசந்திர ஜயவர்த்தனு யூ பி. டொலபில்லெ, செல்வி தர்மவதி, வள்ளியப்பச் செட்டியார் முதலிய வேறு பலரும் பேசினார்கள்.

ராமசாமிச் செட்டியாரும், வள்ளியப்பச் செட்டியாரும் சங்கத்திற்குத் தலைக்கு 1000 ரூபாய் நன்கொடைஅளித்தார்கள்.

பெல்மதுலையில்

பெல்மதுலை, அக். 5

உலகம் போற்றும் மகான் மகாத்மா காந்தியின் 79-வது வருட ஜெயந்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ரக்வான் பகுதி தொழிற் சங்கப் பிரதிநிதி திரு. ஜே. ஜே. எம். தங்கராஜ் அவர்கள் தலைமையில் ரெஸ்ட் ஹவுஸ மைதானத்தில் நடைபெற்றது.

ஆரம்பத்தில் மாகாத்மாவின் உருவப்படமும் தலைவரும் ஊர்வலமாய் பெல்மதுலை பிரதான வீதிகளால் அழைத்துச்செல்லப்பட்டனர். மைதானத்தையடைந்தது. தலைவரை திரு என். ஏ. நாயர் அவர்கள் புஷ்பஹாரம் சூட்டி வரவேற்றனர். தலைவரால் மூவர்ணக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. பின்னர் தலைவர் மகாத்மாவின் வாழ்க்கை தத்துவங்களைப்பற்றி அழகியதோர் சொற்பொழிவாற்றினார்.

இராஜாத் தோட்டம்

இராஜாத்தோட்டம் 1-ம் நம்பர் டிவிஷனில் 2-10-47 உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகளின் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது.

ஸ்ரீமான் எட்வர்ட் டீமேக்கர் தலைமை வகிக்க ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவருடைய தலைமைச் சொற்பொழிவில் மகாத்மாவின்சிறப்பைக் குறிப்பிட்டார்.

டச்சு விமானப் போக்குவரத்து

இந்தியா பாக்கிஸ்தான் தடை ரத்து

புதுடில்லி, அக் 8

இந்தோனேஷியாவில் டச்சு துருப்புகள் ஆக்கிரமிப்பு செய்ததைக் கண்டித்து டச்சு விமானங்கள் இந்தியா பாக்கிஸ்தான் மீது பறந்து செல்லலாகாது என்று பிறப்பித்திருந்த உத்தரவு ரத்து செய்யப்பட்டதன் பேரில் இன்று முதலாவது டச்சு விமானம் 38 பிரயாணிகளுடனும் மற்றும் சரக்குகளுடனும் இன்று கராச்சிக்கு வந்தது. நாளை அது டில்லிக்கு வரும். அதில் இந்தோனேஷியா இந்திய ஸ்தானிகர் திரு ராகவனும் மற்றும் ஸ்தானிக அதிகாரிகளும் பட்டேவியாவுக்குப் பயணமாவார்கள்.

சர்வதேச விமானப் போக்குவரத்துச் சட்டத்தின்படி ஹாலந்துக்கும் இந்தியா-பாக்கிஸ்தானுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி டச்சு விமானங்கள் பறந்துசெல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. (அ-பிரஸ)

இந்தியாவிலிருந்து ஆஸதிரேலியாவுக்கு ஓட்டம்

சிட்னி, அக். 8

இந்தியாவிலிருந்து ஆஸதிரேலியாவில் குடிபுகும் நோக்கமாக 200 பேர்கள் சிட்னியில் வந்திறங்கியுள்ளனர். இவர்களில் ஐரோப்பியரும், ஆங்கிலோ-இந்தியருமே இருக்கிறார்கள். இந்தியாவில் தாம் இப்போ தேவை இல்லையென்றும் அதனாலேயே தாம் ஆஸதிரேலியாவுக்கு குடிபுக வந்ததாகவும் அவர்கள் கூறினர். (ராய்ட்டர்)

இந்தியாவில் வெங்காய ஏற்றுமதித் தடை

நீக்கிவிடுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள்

கொழும்பு, அக். 9

இலங்கையில் வெங்காய தட்டுப்பாட்டின் காரணமாக கள்ள மார்க்கெட்டில் 50 சதம் வரை ஒரு ரூத்தல் விற்கப்பட்டு வருகிறது. மேற்படி தட்டுப்பாட்டிற்குக் காரணம், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வெங்காயம் ஏற்றுமதிசெய்வதைத் தடை செய்திருப்பதே இத்தடையை நீக்குமாறு இந்திய அரசாங்கத்திற்கு நேரடியாகவும் இலங்கைப் பிரதிநிதியூடாகவும் வேண்டுகோள்கள்செய்யப்பட்டுள்ளன என்று அறியப்படுகிறது.

மட்டக்களப்பு காந்தி கழகம்

மட்டக்களப்பிலுள்ள காந்தி கழகத்தாரால் மகாத்மா காந்தியின் 79-வது பிறந்தினவிழா கொண்டாடப்பட்டது.

அங்கு நடந்த பொதுக் கூட்டத்திற்கு ஸதல ஸதாபன-சுகாதார காரியதரிசி திரு. வீ. நல்லையா தலைமை வகித்தார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டெட்டிற்காக, 19-7-ம்ஆண்டு அக்டோபர் மீ 10உ இந்த பத்திரிகை 194A, தட்டாரத் தெரு கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org